வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk

மலர் : 03

20.12.2021 திங்கட்கிழமை

இதழ் : 15

பக்கங்கள் : 16




# சீனா மட்டுமல்ல எந்த நாடும் தமிழருக்குத் தீர்வு வழங்காது

## சம்பந்தன் கனவு காணக்கூடாது என்கிறார் பீரிஸ்



கொழும்பு, டிரெம்பர் 20

“சீனா மாத்திரமல்ல எந்த நாடும் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்காது. வெளிநாடுகள் தீர்வு வழங்கும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கனவு காணக்கூடாது.”

- இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். 15



# இலங்கை தமிழரை வளைக்கும் சீனா; இந்தியாவின் பாதுகாப்புக்கு ஆபத்து!

## ராமதாஸ் எச்சரிக்கை

சென்னை, டிசெம்பர் 20

இலங்கைத் தமிழர்களை படுகொலை செய்ய உதவிய சீனா, ஈழத் தமிழர்களுக்கு உதவுவது இயல்பானது அல்ல என்று பா.ம.க நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார். 15

## சீனத் தூதுவரின் வடக்கு விஜயம்: ஏன் அஞ்சுகின்றது கூட்டமைப்பு?

### அமைச்சர் தினேஷ் கேள்வி

கொழும்பு, டிச. 20

“சீனத் தூதுவர் தலைமையிலான குழுவினர் எந்தவித அரசியல் நோக்கத்துடனும் வடக்கு மாகாணத்துக்குச் செல்லவில்லை. அபிவிருத்தியே அவர்களின் நோக்கம். இந்தநிலையில், அவர்களின் 15

## டொலர் பற்றாக்குறையை சமாளிக்க தங்கத்தின் கையிருப்புகள் விற்பனை

### அமைச்சரவையில் முன்மொழிவு

கொழும்பு, டிசெ. 20

வெளிநாட்டு கையிருப்பின் பணப்புழக்க அளவை அதிகரிப்பதற்காக நாட்டின் தங்க இருப்புக்களை விற்பனை செய்வது தொடர்பாக 15

## கிளிநொச்சியில் கிணற்றிலிருந்து 4 வயதுச் சிறுமி சடலமாக மீட்பு!

கிளிநொச்சி, டிசெ. 20


கிளிநொச்சியில் கிணற்றிலிருந்து 4 வயதுச் சிறுமி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார்.

கிளிநொச்சி, அம்பாள் நகரைச் சேர்ந்த டசிந்தன் சன்சிகா என்ற (வயது-4) சிறுமியே இவ்வாறு சடல 15

## தோட்டக் கிணற்றினுள் விழுந்து எட்டு வயது சிறுவன் உயிரிழப்பு!

### பருத்தித்துறையில் துயரச் சம்பவம்





யாழ்ப்பாணம், டிசெ. 20

தோட்டக் கிணற்றில் மீன் பிடித்து விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் ஒருவர் கிணற்றில் விழுந்து பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

நாச்சிமார் கோவிலடி, திக்கம் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. 15

## பூப்பந்தாட்ட நடுவர் யானை தாக்கியதில் உயிரிழந்தார்!

வவுனியா, டிசெ. 20

வவுனியாவில் இருந்து திருகோணமலை நோக்கி சென்று கொண்டிருந்த 15

## சீனாவின் நடவடிக்கைகளை துளியளவும் ஏற்கமாட்டோம்

### சிறிதரன் எம்.பி. திட்டவட்டம்

வடமராட்சி, டிசெ. 20

சீனத்தூதுவர் சக் கோட்டையில் இருந்து இந்தியா எவ்வளவு தூரம் என்று கேட்பதும் அவர் மன்னாரில் மணல் திட்டு வரை செல்வதும் ஒரு மிக ஆபத்தான விடயம். சீனாவின் நடவடிக்கைகளை நாங்கள் ஒரு துளியளவும் ஏற்க 15




உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# வடக்கு மீனவரை மீண்டும் மீண்டும் துன்பப்படுத்துவதை நிறுத்துங்கள்

## தமிழக மீனவர்களிடம் டக்ளஸ் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 20

**கடந்த கால அழிவு யுத்தத்தினால் அனைத்தையும் இழந்த வடக்கு கடற்றொழிலாளர்களை மீண்டும் மீண் டும் துன்பப்படுத்தும் செயல்பாடுகளை கடற்றொழிலில் ஈடுபடுகின்ற தமிழக உறவுகள் நிறுத்த வேண்டும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.**



இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து தடை செய்யப்பட்ட தொழில் முறைகளைப் பயன்படுத்தி மீன்பிடித்துக் கொண்டிருந்த 6 மீன்பிடிப் படகுகள் நேற்று அதிகாலை கைப்பற்றப்பட்டிருப்பதுடன், 43 இந்தியக் கடற்றொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இந்தியக் கடற்றொழிலாளர்களினால் கடல் வளங்கள் எந்தளவிற்கு அநியாயமாக அழிக்கப்படுகின்றன என்பதற்கு, கைது செய்யப்பட்ட 6 இந்திய மீன்பிடிப் படகுகளில் இருந்தும் கைப்பற்றப்பட்ட பல மெற்றிக்தொன் மீன் குஞ்சுகளே சாட்சிகளாக இருக்கின்றன.

# மாகாண தேர்தல் ஒத்திவைக்கப்படாது

கொழும்பு, டிசெ. 20

மாகாண சபை தேர்தலினை ஒத்திவைக்கும் தீர்மானம் இல்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கெலிஓயா பகுதியிலுள்ள விகாரை ஒன்றில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அமைச்சர் தினேஷ் குணவர்தன இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைக்கும் யோசனை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# சிரேஷ்ட சட்டத்தரணி கேசவன் கொரோனா தொற்றால் மரணம்!

யாழ்ப்பாணம், டிசெ. 20

சிரேஷ்ட சட்டத்தரணி கனகரட்ணம் கேசவன் இன்று பிற்பகல் காலமானார். அவருக்கு வயது 74.

கோவிட்-19 நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட அவர் யாழ். போதனா மருத்துவமனை யில் சிகிச்சை பெற்று உயிரிழந்தார்.



யாழ்ப்பாணம் நீதிமன்றபதில் நீதிவானாக நீண்டகாலம் கடமையாற்றிய அவர், யாழ்ப்பாணம் மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளராகவும் தனது இயலுமான காலம் வரை பதவி வகித்தவர்.

யாழ்ப்பாணம் கல்வியங்காடு பகுதியைச் சேர்ந்த அவர் கனகரட்ணம் சட்ட நிறுவனத்தின் இயக்குநருமாவார். (அ)

# 18 பேர் கொரோனாவால் மரணம்!

கொழும்பு, டிசெ. 20

கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்ட 18 பேர் ஒரே நாளில் நேற்று முன் தினம் உயிரிழந்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களம் இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

இதன் அடிப்படையில் இலங்கையில் இதுவரையில் கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 14,752 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கோவிட் தடுப்பூசி அட்டை ஜனவரி 1 முதல் கட்டாயம்

கொழும்பு, டிசெ. 20

2022 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் பொது இடங்களுக்கு பிரவேசிக்கும்போது கோவிட்-19 தடுப்பூசி அட்டைகளை கட்டாயமாக்க அரசு தீர்மானித்துள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை சுகாதார அமைச்சு மேற்கொண்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

கம்பஹா மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கம்பஹா மாவட்ட கோவிட்-19 குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்தில் தேவையான கோவிட்-19 தடுப்பூசியை பெற்றுக் கொள்வது சகல குடிமக்களின் பொறுப்பாகும் எனவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேலும் கூறினார்.

கம்பஹா மாவட்டத்தில் பூஸ்டர் தடுப்பூசியை டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவு செய்யுமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் மேலும் பணிப்புரை விடுத்தார். (அ)

## கல்வி tv CHANNEL-1

**20.12.2021**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

## கல்வி tv CHANNEL - 2

**20.12.2021**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

Eelanadu
20.12.2021 திங்கட்கிழமை
பிலவ வருடம், மார்கழி 05

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

editor@eelanadu.lk, eelanaduweekly@gmail.com, news@eelanadu.lk
021 730 1370

## புவிசார் தலையெழுத்து?

அரசியலில் ஒரு பிரபலமான கூற்றுண்டு. அதாவது, அரசியலில், நண்பர்கள் - எதிரிகளில் மாற்றங்கள் ஏற்படலாம் ஆனால், ஒரு நாட்டின் அமைவிடம் நிரந்தரமானது. இந்த அமைவிடம்தான் - ஒரு நாட்டின் புவிசார் அரசியலை தீர்மானிக்கின்றது. இலங்கையின் அமைவிடத்தின் அடிப்படையில், இலங்கையின் புவிசார் அரசியலென்பது, இந்தியாவை மையப்படுத்திய ஒன்றாகும். இந்தியாவை தவிர்த்து சிந்திக்கும் போதெல்லாம் இலங்கை நெருக்கடிக்குள் சிக்குவதை தவிர்க்கவே முடியாது. இதுதான் இலங்கையின் புவிசார் தலையெழுத்து. தலையெழுத்தை மாற்றமுடியுமா?

1987 இந்திய - இலங்கை ஒப்பந்தம் அப்போதிருந்த ஜே. ஆர். ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் வெளிவிவகாரக் கொள்கையின் விளைவான ஒன்றாகும். இந்தியாவை புறம்தள்ளி மேற்குலகுடன் குறிப்பாக, அமெரிக்காவுடன் நெருங்கிச் செல்லும் வகையிலான சில நடவடிக்கைகளை மேற்கொண்டதன் விளைவாகவே இந்திரா காந்தி அதிருப்தியடைந்தார். அன்றைய உலக நிலைமையில், இந்தியாவும் அமெரிக்காவும் நட்புசக்திகளாக இருக்கவில்லை. இலங்கையில் மேற்குலகின் அதாவது, அமெரிக்காவின் அதிக தலையீடுகளை இந்தியா விரும்பியிருக்கவில்லை. இவ்வாறானதோர் அரசியல் பின்னணியில்தான், இந்தியாவின் நேரடியான தலையீடு இடம்பெற்றது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில், இலங்கைத் தீவில் கால் பதித்த இந்திய அமைதிப் படைகள், பிரேமதாச - விடுதலைப் புலிகள் உடன்பாட்டின் அடிப்படையில் வெளியேற்றப்பட்ட பின்னர், இந்தியா தமிழர் பிரச்னையில் நேரடியாக தலையீடு செய்யவில்லை. அதன் பின்னர் இலங்கையில் இடம்பெற்ற அனைத்து விடயங்களிலும் இந்தியா எட்டவே நின்றது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், மேற்குலகின் அனுசரனையுடன் நோர்வே, இலங்கையின் சமாதான முன்னெடுப்புக்களில் ஈடுபட்டது. மிகவும் ஆடம்பரமாக ஆரம்பித்த அந்த முயற்சி, இறுதியில் விடுதலைப் புலிகளின் அழிவுடன்தான் முற்றுப்பெற்றது.

இந்தியாவை ஏதோவொரு வகையில் இந்த விடயத்தில் ஈடுபடுத்தினால் மட்டும்தான், மேற்குலக அரசியல் பொறியிலிருந்து தப்பலாமென்று புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எண்ணினார். அந்த அடிப்படையில் இந்தியாவை நோக்கி ஒரு நகர்வையும் மேற்கொண்டார். ஆனால், அது வெற்றியளிக்கவில்லை. இந்தியாவை எவ்வாறேனும் தமிழர் பிரச்னைக்குள் மீளவும் கொண்டுவரவேண்டும் என்னுமடிப்படையில்தான், பாலசிங்கம் அந்த முயற்சியை மேற்கொண்டிருந்தார். நோய்வாய்பட்டிருந்த பாலசிங்கம் 2006 டிசம்பரில் உயிரிழந்தார்.

2009இல் யுத்தம் நிறைவுற்று 12 வருடங்கள் கடந்துவிட்டன. ஆனால், தமிழர் பிரச்னையில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய முன்னேற்றங்கள் இதுவரையில் ஏற்படவில்லை. பல விடயங்கள் இடம்பெற்றன. முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்பட்டது. ஆனாலும், அறுவடை கிடைக்கவில்லை. இதுவரையில் - போதாமைகள் இருந்தாலும், அதிருப்திகள் இருந்தாலும், இந்தியாவின் தலையீட்டின் அடிப்படையில் கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத்தச்சட்டம் மட்டும்தான் நின்று நிலைக்கின்றது. இவ்வாறானதொரு சூழலில்தான், இந்தியாவின் ஈடுபாட்டை மீளவும் கொண்டுவரும் வகையில் 13இன் அடிப்படையில் - அதாவது, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில், இந்தியாவை நோக்கி ஒரு கோரிக்கை - என்னுமடிப்படையில் முயற்சியொன்று இடம்பெற்றுவருகின்றது. ஆனால், அந்த முயற்சியை குழப்பும் வகையிலும் அல்லது பலவீனப்படுத்தும் வகையிலும் சில நகர்வுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்தியாவை நோக்கி கோரிக்கையொன்றை முன்வைப்பதை - 13ஆவது திருத்தச்சட்டத்தின் உள்ளடக்கத்தோடு இணைத்து குழப்பிக் கொள்கின்றனர். உண்மையில், இங்கு விடயம் 13ஆவது திருத்தச்சட்டத்திற்குள் என்ன இருக்கிறதென்பதல்ல - மாறாக, இன்றைய சூழலில் 13ஆவது திருத்தத்தின் வகிபாகம் என்ன என்பதுதான் விடயம். 13இற்குள்ள என்ன இருக்கிறதென்பது - ஒரு சாதாரண அரசியல்வாதியின் கேள்வியாகும். ஆனால், ஈழத் தமிழர் அரசியலை புவிசார் கண்ணோட்டத்தில் நோக்கும் ஓர் அரசியல்வாதியின் பார்வையோ முற்றிலும் வேறுபட்டதாக அமைந்திருக்கும். அதாவது, இன்றைய காலத்தில் 13இன் வகிபங்கு என்ன? அது எவ்வாறன முக்கியத்துவத்தை பெற்றிருக்கின்றது? அதனை நாம் எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளலாம்? புவிசார் அசியல் தொடர்பில் புரிதலுள்ள அரசியல்வாதிகள், இப்படியான கேள்விகளின் வழியாகவே சிந்திப்பர், அவர்களிடம் புவிசார் அரசியல் அறிவிருந்தால்!

# இலங்கையின் ‘பிச்சாடனர்’ நிலையை உறுதிப்படுத்திய Fitch Ratings!

**-அலசுவது இராஜதந்திரி-**



அமெரிக்காவின் நியூயோர்க் நகரை மையமாகக்கொண்ட கடன் தரமதிப்பீட்டு நிறுவனமான Fitch Ratings, இலங்கை ஒரு சிக்கல் நிறைந்த கடனாளியாக மாறியுள்ளதோடு, 2022 - 2023ஆம் ஆண்டுகளில் சர்வதேச ரீதியாக பெரும் நிதி நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும் நிலையை எதிர் நோக்கும் எனத் தெரிவித்துள்ளது.

அத்துடன், அந்நிய செலாவணி பெரிதும் கரைந்துபோயுள்ள நிலையில் புதிய கடன் உதவிகளை பெறுவதிலும், செலுத்தவேண்டிய கடன்கள் தொடர்பாகவும் இலங்கை பாரிய நெருக்கடியை எதிர் நோக்குமெனவும் குவைஉா சுயவடைபௌ நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

Fitch நிறுவனம் மேலும் கருத்து வெளியிடுகையில், இலங்கையின் அந்நியச்செலாவணி கையிருப்பு எதிர்பார்த்ததைவிட விரைவாக கரைந்து சென்றுள்ளதாகவும் இதற்கு காரணம் இறக்குமதி கொடுப்பனவுகள் அதிகரித்து அவற்றை மீள செலுத்த முடியாமையும், மத்திய வங்கியிடம் அந்நிய செலாவணி கையிருப்பு காணப்படாதிருப்பதும் முக்கிய காரணங்களாகும் எனத் தெரிவித்துள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் இலங்கையின் அந்நியச்செலாவணி கையிருப்பு 2 பில்லியன் டொலராக குறைந்துள்ளதுடன், கடந்த நவம்பர் மாத இறுதியில் 1.6 பில்லியன் டொலரக அந்நிய செலாவணி கையிருப்பு குறைவடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதாரம் ஒருபோதும் உறுதிப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை. இந்நிலையில், நிர்வாக கட்டமைப்பற்ற 1978ஆம் ஆண்டில் இலங்கையில் அறிமுகமான திறந்த பொருளாதார கொள்கை, இலங்கையின் உயரிய வளங்களையும் புறக்கணிக்க வைத்து ஒரு சிறிய குண்டூசியைக்கூட இறக்குமதி செய்யவேண்டிய நிலையை ஏற்படுத்தியிருந்தது.

இதுதவிர, இலங்கையில் இடம்பெற்ற மூன்று தசாப்தகால யுத்தம் இலங்கைப் பொருளாதாரத்தை முற்றிலும் முடக்கிவிட்டிருந்தது. இருந்தபோதிலும், இலங்கையில் யுத்தகாலப்பகுதியில் காணப்பட்ட பொருளாதார நிலவரத்தைவிட தற்போது மோசமான தன்மை காணப்படுவதையே அவதானிக்க முடிகின்றது.

இலங்கையில் யுத்தம் முடிவுற்று பத்து வருடங்களுக்கும் மேலாகியுள்ளது. இருந்தபோதிலும், யுத்தத்துக்குப் பின்னரான சூழலில் ஆட்சியதிகாரங்களையும் பொருளாதார நிலவரத்தையும் நிர்வகிக்க முடியாத, முற்றிலும் அரசியலநுபவமற்ற ஒருவர் ஆட்சியதிகாரத்தில் அமர்ந்தமையே இன்று இலங்கை பொருளாதார நெருக்கடிக்கு பெரிதும் முகங்கொடுத்துள்ளமைக்கு முக்கிய காரணமாக இருக்கின்றது எனக் குறிப்பிடலாம். இதுதவிர, கொவிட் -19, உலகளாவிய ரீதியில் பெரும் தாக்கத்தை ஏறபடுத்திவிட்டிருந்த நிலையில் ஏற்கனவே பாதிப்புற்றிருந்த இலங்கை மிக மோசமாக மேலும் பாதிப்புக்குள்ளாகியது.

இலங்கைக்கு அந்நியச்செலவாணியை ஈட்டித்தருகின்ற முக்கிய துறைகளில் முன்னணி வகிப்பதாக சுற்றுலா பயணத்துறை விளங்கியிருந்தது. ஆயினும், கொவிட்-19 தாக்கம் சுற்றுலாப் பயணத்துறையை பாதித்த நிலையில், இலங்கைக்கு குறிப்பாக டிசம்பர் மாதத்தில் பெருமளவில் வருகைதரும் உல்லாசப்பயணிகளின் எண்ணிக்கை வெகுவாகக்குறைந்துள்ளது.


அத்துடன், சர்வதேச விமானப்போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து என்பவற்றிலும் பாரிய வீழ்ச்சி கோவிட்-19 காரணமாக ஏற்பட்டிருந்தது. இதன் காரணமாகவும் இலங்கையின் ஏற்றுமதித்துறையும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி விட்டிருந்தது.

2022ஆம் ஆண்டு முதல் 2026ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் இலங்கை வெளிநாட்டு அந்நிய செலாவணிக்கடனாக 26 பில்லியன் டொலர்களை கடன் தொகையாகவும் அதற்குரிய வட்டியாகவும் செலுத்த வேண்டிவரும் எனவும் Fitch Ratings நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன், கடன்தொகை குறித்த தனது இக்கட்டான நிலைமையை சமாளிக்க இந்தியா, சீனா உட்பட வெளிநாட்டு நிதி நிறுவனங்களின் உதவியை இலங்கை நாடினாலும், முழு அளவில் தனது கடன் சுமையிலிருந்து மீளமுடியாத நிலையே ஏற்படும் என்று குவைஉா சுயவடைபௌ எச்சரித்துள்ளது.

இலங்கை அரசு எதிர் நோக்கியுள்ள இத்தகைய பாரிய நெருக்கடி காரணமாக, சர்வதேச ரீதியான தாக்கங்களுக்கு முகங்கொடுத்திருந்தாலும், உள்நாட்டில் பொருளாதார நெருக்கடியின் தாக்கம் பல்வேறு வடிவத்திலுமான பெரும் பிரச்னைகளுக்கு வழியமைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றே கருதலாம்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
நேர்மறை எண்ணங்கள் பிறக்கும். புதிய முதலீடு செய்வீர்கள். புது முடிவு எடுப்பீர்கள். புதியவரின் நட்பால் உற்சாகம் அடைவீர்கள். வாழ்வில் முன்னேற்றம் வருவதற்கான முயற்சி பலிக்கும்.

**இடபம்**
கணவன், மனைவி இடையே ஒற்றுமை அதிகரிக்கும். அலுவலகத்தில் உங்களுக்கு மரியாதை கூடும். நிம்மதியான நாள். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவீர்கள்.

**மிதுனம்**
சுபச்செலவுகள் ஏற்படும். மகிழ்ச்சி அதிகரிக்கும். கலைத்துறையினரின் முயற்சிகள் நல்ல பலன் தரும். எதையும் யோசித்துச் செய்து பலன் அடைவீர்கள்.

**கடகம்**
வீண் பேச்சு வேண்டாம். சுபச்செலவு ஒன்று உண்டு. தன்னம்பிக்கையும் தைரியமும் குறையாமல் கவனமாக இருங்கள். வெளிநாட்டில் உள்ள உறவினரிடம் இருந்து நல்ல செய்தி வரும்

**சிம்மம்**
நண்பர் ஒருவரை சந்தித்து பேசி மகிழ்ச்சி அடைவீர்கள். உங்கள் மீது மற்றவர்கள் கோபப்பட முடியாதபடி நடந்து கொள்வீர்கள். மனக்கவலை குறையும். எதிர்பார்த்த பணவரவு இருக்கும்.

**கன்னி**
பணியாளர்கள் பயணங்கள் செல்ல வேண்டி இருக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். பிரியமானவர்கள் பாராட்டுவர். கடன் சுமையைக் குறைக்க பொறுப்புடன் பாடுபடுவீர்கள்.

**துலாம்**
குழந்தைகளின் நடவடிக்கைகளில் கவனம் செலுத்துங்கள். பேச்சு, செயலில் கவனம் தேவை. சேமிப்பில் ஆர்வம் கூடும். வெளிநாடு செல்லும் முயற்சியில் வெற்றி அடைவீர்கள்.

**விருட்சிகம்**
பொறுமை அவசியம். நட்பு வட்டம் விரிவடையும். மேலதிகாரிகளிடம் வாக்குவாதம் செய்ய வேண்டாம். ஓய்வு எடுப்பதற்கான முயற்சிகள் ஓரளவு பலன் தரும்.

**தனுசு**
இளைஞர்களின் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். விரயம் ஏற்படும். கூடுதலாக உழைத்து நன்மை காண்பீர்கள். கடந்த நாட்களில் இருந்த மன உளைச்சல் நீங்கும்.

**மகரம்**
உழைப்பு அதிகரிக்கும். சிறு முயற்சி ஒன்று பலன் தரும். திடீர்த் திருப்பம் உண்டு. கலகலப்பான நாள். சுப நிகழ்ச்சி பற்றிய முயற்சியில் உடனடிப் பலன் ஏற்படும்.

**கும்பம்**
நீங்கள் சந்திக்க விரும்பிய நபரை இன்று சந்திப்பீர்கள். எதிரியிடம் இருந்து விலகுவதற்கான முயற்சிகளை செய்வீர்கள். குடும்பத்தினரின் ஒற்றுமை காரணமாக மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**மீனம்**
எந்தவொரு விஷயத்தையும் மிகுந்த முனைப்புடன் செய்வீர்கள். இன்று வரும் செய்தி ஒன்று மகிழ்ச்சி தரும். கடன் தீரும். பல நாள் கழித்து நண்பர்களை சந்தித்து மகிழ்ச்சி அடைவீர்கள்.

### 42 மீனவர்கள் கைதானதை எதிர்த்து

# இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தம்

இராமேஸ்வரம். டிசெ. 20

சக மீனவர்கள் 42 பேரை இலங்கை கடற்படை சிறை பிடித்துச் சென்றதைக் கண்டித்து காலவரையற்ற வேலை நிறுத்தத்தை இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் நேற்றுக் காலை தொடங்கியுள்ளனர்.

வங்கக் கடல் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்கள் 42 பேரை இலங்கைக் கடற்படையினர் நேற்று அதிகாலை சிறை பிடித்துச் சென்றனர். மேலும் அவர்களது 6 விசைப் படகுகளையும் அவர்கள் பறிமுதல் செய்தனர். இந்த நிகழ்வு இராமேஸ்வரம் மீனவர்களிடையே அதிர்ச்சியையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளது.



இந்த நிலையில் இலங்கை கடற்படையின் இந்தச் செயலைக் கண்டித்து இராமேஸ்வரம் மீனவர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தத்தை நேற்று தொடங்கியுள்ளனர். மேலும் இன்று காலை இராமேஸ்வரம் பேருந்து நிலையம் முன் கண்டன ஆர்பாட்டத்தையும் மீனவர்கள் நடத்த உள்ளனர்.


இதேவேளை. தமிழக மீனவர்கள் 42 பேரை இலங்கை கடற்படையினர் படகுகளுடன் சிறைப்பிடித்திருப்பதாக வந்திருக்கும் செய்தி கவலையளிக்கிறது என்று அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் தெரிவித்துள்ளார். 42 தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்திருப்பது கண்டித்தக்கது என்று பா.ம.க. இளைஞரணித் தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

# சசிகலாவுக்கு எதிராக சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டும்

### முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் மனு

சென்னை, டிசெ. 20

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பெயரை பயன்படுத்தும் சசிகலா மீது சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சென்னை பொலிஸ் ஆணையாளர் சங்கர் ஜிவாலிடம் முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார் மனு அளித்துள்ளார்.



அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி ஆகியோர் இணைந்து அக்கட்சியை வழி நடத்தி வருகின்றனர். அதே நேரத்தில் சசிகலாவும் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் என்ற பெயரில் அறிக்கைகளை வெளியிட்டு வருகிறார். அ.தி.மு.க. கொடியையும் பயன்படுத்தி வருகிறார்.

இந்தநிலையில் ஜெயக்குமார், சென்னை பொலிஸ் ஆணையாளர் சங்கர் ஜிவாலுக்கு நேற்று மனு ஒன்றை அனுப்பி உள்ளார். அந்த மனுவில் அவர் கூறியிருப்பதாவது:-

முன்னாள் முதல்-அமைச்சர் ஜெயலலிதாவின் மறைவுக்கு பின்னர் ‘இரட்டை இலை’ சின்னம் ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க. வுக்கே சொந்தம் என்பதை தேர்தல் ஆணையம் உறுதி செய்தது.

இந்த புகார் அடிப்படையில் சசிகலா மீது வழக்குப்பதிவு செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாம்பலம் பொலிஸ் அத்தியட்சகருக்க தாங்கள் உரிய உத்தரவை பிறப்பிக்க வேண்டும்.’

இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது.

# தமிழக அரசு விருந்தினராக சென்னை வருகிறார் மோடி

சென்னை, டிசெ. 20

இந்திய பிரதமர் நரேந்திர மோடி வரும் ஜனவரி 12 ஆம் தேதி, புதிதாக கட்டப்பட்ட 11 மருத்துவ கல்லூரிகளை திறந்து வைப்பதற்காக தமிழகம் வருகிறார். விருதுநகரில் நடைபெறவுள்ள இந்நிகழ்ச்சியில், மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் மண்சுக் மாண்டவியாவும் கலந்துகொள்கிறார்.

தமிழ்நாட்டில் மு.க ஸ்டாலின் தலைமையிலான ஆட்சி அமைந்த பிறகு, முதன்முறையாக மோடி தமிழகம் வருகிறார்.

இந்த கல்லூரிகள் திறக்கப்பட்டதும் சுமார் 1450 இடங்களுக்கான மாணவர்கள் சேர்க்கை நடைபெறும்.

முந்தைய அ.தி.மு.க. ஆட்சி காலத்தில், பிரதமர் மோடியின் திட்டங்கள் வாயிலாக மருத்துவ கல்லூரிகள் ஆரம்பிப்பதற்கான முயற்சிகளும், நிதியுதவி பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு கல்லூரி கட்டுவதற்கான 325 கோடி ரூபாய் செலவை மத்திய அரசும், மாநில அரசும் பகிர்ந்து கொண்டன.

அரியலூர், திண்டுக்கல், நாகப்பட்டினம், விருதுநகர், கள்ளக்குறிச்சி, ஊட்டியில் தொடங்கப்படவுள்ள கல்லூரிகளில் 150 இடங்களும், நாமக்கல், திருவள்ளூர், திருப்பூர், ராமநாதபுரம் கல்லூரிகளும் 100 இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இதுதவிர கடலூர், காஞ்சிபுரத்திலும் கல்லூரிகள் தொடங்கிட முந்தைய அதிமுக அரசு முன்மொழிந்தது. ஆனால், சிதம்பரத்தில் அண்ணாமலை பல்கலைக்கழகம், காஞ்சிபுரத்தில் தனியார் மருத்துவக் கல்லூரி இருப்பதால், அந்த கோரிக்கையை மத்திய அரசு நிராகரித்துவிட்டது.

இதுகுறித்து பேசிய முன்னாள் சுகாதாரத் துறை அமைச்சர் விஜயபாஸ்கர், “இந்த திட்டத்தை போர்கால அடிப்படையில் முன்னெடுத்து நிலம் கையகப்படுத்தும் பணியை முடித்து, அரசு நிறுவனங்களிடம் இருந்து விரைவில் அனுமதி பெற முடிந்தது. ஒரே நேரத்தில் 11 மருத்துவக் கல்லூரிகளுக்கான அனுமதி தமிழ்நாட்டிற்கு கிடைத்தது வரலாற்று சிறப்பிமிக்கது” என்றார்.

# மயிலிட்டித் துறைமுகத்தில் கட்டப்படும் இந்திய இழுவைப் படகுகளால் பாதிப்பு!

## அப்பகுதி மீனவர்கள் குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம், டிசெ. 20

**இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகளின் போது கைப்பற்றப்படும் மிகப்பெரிய இழுவைப் படகுகளை கட்டி வைப்பதால் மயிலிட்டித்துறைமுகத்துக்கு பாதிப்புக்கள் ஏற்படுவதாக மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.**

ஏற்கனவே 80 அடி நீளமான இரண்டு படகுகள் மயிலிட்டித் துறைமுகத்தில் கட்டப்பட்டுள்ளன.

குறித்த படகுகளை பொறுப்பேற்கமுடியாது என்று கடற்படையினர் தெரிவித்திருந்த நிலையில் கடற்படையினருக்கும் நீரியல் வளத் திணைக்களத்தினருக்கும் இடையே இழுபறி நிலை ஏற்பட்டிருந்தது.

இருந்தபோதிலும் கடற்படையினர் அந்தப் படகுகளைப் பொறுப்பேற்காத நிலையில் அவை மயிலிட்டித்துறைமுகத்தில் கட்டப்பட்டுள்ளன.

அண்மைய நாட்களாக கடலில் நிலவும் கொந்தளிப்பு நிலை காரணமாக 80 அடி நீளமான படகுகள் கடலிலே இழுத்துச்செல்லப்படும் நிலையில் அதனைத் தாங்கி நிற்கும் துறைமுகத்தின் கற் தூண்கள் தொடர்பில் மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதனிடையே,

நெடுந்தீவு கடற்பரப்பில் நேற்று அதிகாலை மீனவர்கள் 43 பேருடன் கைப்பற்றப்பட்ட 06 படகுகளும் மயிலிட்டித்துறைமுகத்துக்கு இழுத்து வரப்பட்டன.

இதனால் தொடர்ந்தும் துறைமுகத்துக்கு பாதிப்பு நிலையே காணப்படுவதாக மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் கடற்றொழில் அமைச்சரிடம் மீனவர்கள் தெரிவித்ததை அடுத்து நாளை செவ்வாய்க்கிழமை துறைமுகப்பகுதிக்கு வந்து பார்வையிடுவதாகவும் அதன் பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் தீர்மானிப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார் என மீனவப் பிரதிநிதிகள் கூறினர். (அ)







# இந்திய மீனவர்கள் 43 பேர் நெடுந்தீவில் கைதாகினர்

யாழ்ப்பாணம், டிசெ. 20

நெடுந்தீவுக்கு அருகே சட்டவிரோதமாக மீன் பிடியில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் 43 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த கடற்படையினர், இவ்வாறு சட்டவிரோதமாக எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த தமிழகத்தின் ராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த மீனவர்களை கைதுசெய்தனர். இதன்போது, 6 படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற் படையினர் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்களை மயிலிட்டித் துறைமுகத்துக்கு அழைத்து வந்ததன் பின்னர் காங்கேசன்துறை இடைத்தங்கல் முகாமுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக கடற்படைத் தகவல்கள் தெரிவித்தன. (அ-03)

# பல்கலைக்கழகங்களுக்கான காத்திருப்பு காலம் நீக்கப்படும்

கொழும்பு, டிசெ. 20

க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்பட்டதன் பின்னர் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் வரையான 10 மாதங்களுக்கும் மேலான காத்திருப்பு இடைவெளியை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

அவிசாவளையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அமைச்சர் இதனை கூறினார். இவ்வருடத்துக்கான க.பொ.த உயர் தரம், க.பொ.த சாதாரண தரம் மற்றும் புலமைப் பரிசில் பரீட்சைகள், திட்டமிடப்பட்ட திகதிகளில் எவ்வித மாற்றமுமின்றி நடைபெறும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ)

# பண்டிகைக்கால விசேட நிவாரண பொதி சதொச ஊடாக இன்று முதல் விநியோகம்

கொழும்பு, டிசெ. 20

எதிர்வரும் பண்டிகைக் காலத்துக்காக சதொச நிறுவனத்தினூடாக பொதுமக்களுக்கு வழங்கப்படவுள்ள விசேட நிவாரணப் பொதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தலைமையில் இந்த நிவாரணப் பொதி தொடர்பான தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த பொருட்கள் ஒரு நிறுவனத்தில் 2,751 ரூபாவாகவும், இன்னுமொரு நிறுவனத்தில் 2,489 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. ஆனால், சதொச ஊடாக 1,998 ரூபாவுக்கு விற்பனை செய்கிறோம். இந்த பொருட்களை வீட்டுக்கு கொண்டு வந்து கொடுக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம். அவ்வாறு வீடுகளுக்கு பொருட்களை விநியோகிக்கும்போது சதொசவில் பொருட்கள் இல்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படமாட்டது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

நிவாரணப் பையை பெற்றுக்கொள்ள 1998 என்ற எண்ணுக்கு அழைக்க முடியும். இன்று திங்கட்கிழமை முதல் விநியோக நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை சதொச நிறுவனம் முன்னெடுத்துள்ளது.

0115 201 998 என்ற எண்ணுக்கு வட்ஸ்அப் செய்தியை அனுப்புவதன் மூலமும் உரிய நிவாரணப் பொதியை பெற்றுக்கொள்ளலாம்.

சிறப்பு நிவாரணப் பையில் 10 கிலோ சம்பா அரிசி, 2 கிலோ பழுப்பு சர்க்கரை, 1 பைக்கெற் நூடுல்ஸ், 100 கிராம் தேயிலை, 250 கிராம் வெண்டைக்காய், 2 சவர்க்காரம் மற்றும் 1 பைக்கெற் பப்படம் ஆகியவை அடங்கும். (அ)

# ரூ.1000 வழங்காத கம்பனிகள் குறித்து ஆராய்வதற்கு விசேட குழு விரைவில்!

கொழும்பு, டிசெ. 20

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்க மறுக்கும் பெருந்தோட்ட நிறுவனங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது.

தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்கத் தரப்புகளில் இருந்து முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்கு விசேட ஆணையாளர் ஒருவர் தலைமையிலேயே இந்தக் குழு அமையும் என தொழில் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா தெரிவித்துள்ளார்.

"பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு எதிராக பெருந்தோட்ட நிறுவனங்கள் மேன்முறையீடு செய்து வழக்கு தாக்கல் செய்துள்ளன.

எனினும், ஆயிரம் ரூபா வேதனம் வழங்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு நீதிமன்றினால் இது வரையில் தடைவிதிக்கப்படவில்லை. இவ்வாறான பின்னணியில் சில பெருந்தோட்ட நிறுவனங்கள் நாளாந்தம் ஆயிரம் வேதனம் வழங்குவதில் இருந்து விலகியுள்ளன."

-என்றும் அமைச்சர் சுட்டிக் காட்டினார். (அ)

# முகமாலைப் பகுதியில் சனிக்கிழமை விபத்து!

## இருவர் படுகாயம்!!

கிளிநொச்சி, டிசெ. 20

கிளிநொச்சி மாவட்டம் பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முகமாலைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு விபத்து இடம்பெற்றது.

முகமாலை ஏ-9 வீதியில் யாழ். நோக்கிச் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் திடீரென வீதியில் தழும்பியதால் பளை நோக்கி சென்றுகொண்டிருந்த ஹை ஏஸ் ரக வாகனத்தில் மோதியது.

இதனையடுத்து ஹைஏஸ் வாகனம் சடுதியாக நிறுத்தப்பட்டபோது பின்னே வந்துகொண்டிருந்த ஓட்டோ வேகக் கட்டுப்பாடை இழந்து ஏ-9 வீதியருகே கவிழ்ந்து வீழ்ந்தது.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த நபரும் ஓட்டோவில் பயணித்த சாரதி உட்பட இருவர் படுகாயமடைந்த நிலையில் பளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# கூட்டமைப்புக்கு இணைத்தலைமை உருவாக்கப்படுவது அவசியமானது!

## கருணாகரம் எம்.பி. வலியுறுத்து



மட்டக்களப்பு, டிசெ.20

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனியும் பதிவு செய்யப்படாமல் இருக்க முடியாது என்பதில் தமிழீழ விடுதலை இயக்கம் உறுதியாகவுள்ளதாக அந்தக் கட்சியின் பொதுச்செயலாளரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.**

ஒரு தனிமனிதனின் தலைமைத்துவத்துக்குள் இல்லாமல் இணைத்தலைமையொன்று உருவாக்கப்படவேண்டும் என்பதிலும் உறுதியாகவுள்ளோம் என்றும் அவர் கூறினார்.

மட்டக்களப்பில் உள்ள அவரது அலுலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத்தவரை 20 வருடங்களையும் கடந்து சென்றுகொண்டிருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரை பதியப்படாத நிலையிலுள்ள ஒரு அரசியல் கூட்டாகவே இருக்கின்றது. இது மிகவும் துரதிர்ஷ்டவசமானது.

மலையக கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு முன்னணியை உருவாக்கியிருந்தார்கள்.மூன்று வருடத்துக்குள்ளே அவர்கள் அதனை ஒரு அரசியல்கட்சியாக பதிவு செய்துள்ளார்கள்.

அந்தவகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக சம்பந்தன் ஐயா தொடர்ச்சியாக இருந்துவருகின்றார். சம்பந்தன் ஐயா திருகோணமலை பாராளுமன்ற உறுப்புரிமையை இராஜினாமா செய்யப்போவதாக தற்போது பத்திரிகை ஊடாக அறியக்கூடியதாகவுள்ளது. இது எந்தளவுக்கு உண்மையென்று தெரியாவிட்டாலும் அப்படியொரு நிலைமையேற்பட்டால் பாராளுமன்ற குழுக்களின் தலைவராக இருப்பவர் சம்பந்தன் ஐயா, பாராளுமன்ற உறுப்பினர் பதவி வலிதற்றதாகும்போது தலைமை பொறுப்பையும் இழப்பார்.

இருந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை பொறுப்பிலிருந்து விலக வேண்டிய தேவையில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை வகிப்பவர் பாராளுமன்ற உறுப்பினராகயிருக்கவேண்டும் என்ற நியதியில்லை. அவர் விரும்பி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பதவியை துறப்பாரானால் தமிழ்த் தேசியக் கூட்டத்தின் ஆரம்பத்திலிருந்து அங்கம் வகிகும் கட்சி என்ற அடிப்படையில் தமிழீழ விடுதலை இயக்கம் ஒரு உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. இனியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதியப்படாமலிருக்கமுடியாது.

ஒரு தனிமனிதனின் தலைமைத்துவத்துக்குள் இல்லாமல் இணைத்தலைமையொன்று உருவாக்கப்படவேண்டும் என்பதிலும் உறுதியாகவுள்ளோம்-என்றார். (அ)

## மீண்டும் போராட்டத்துக்கு அதிபர்,ஆசிரியர்கள் தயார்!

கொழும்பு, டிசெ. 20

அதிபர் ஆசிரியர்களின் கோரிக்கைகள் தொடர்பில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எதிர்வரும் ஜனவரி மாதம் 22ஆம் திகதிக்கு முன்னர் நிறைவேற்றப்படாவிட்டால், தாம் மீண்டும் பாரிய போராட்டம் முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சம்பள முரண்பாடு மற்றும் அதிபர் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சுற்றறிக்கை தொடர்பான பிரச்னைகள் தொடர்பில் 6 மாத காலத்துக்குள் தீர்வு வழங்குவதற்கான குழு அமைக்கப்படவேண்டும் என அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

யாழ். மத்திய கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வடமாகாண அதிபர்கள், ஆசிரியர்களுடனான கலந்துரையாடலின் போது அவர் இதனைக் கூறினார். (அ)

## ஹங்கம பொலிஸ் சிறைக்கூடத்தில் தடுத்து வைக்கப்பட்ட நபர் மரணம்

கொழும்பு, டிசெ. 20

ஹங்கம பொலிஸ் நிலைய சிறைக்கூடத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நபரொருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பௌர்ணமி தினமான நேற்று முன்தினம் ஹங்கம, ரன்ன பிரதேசத்தில் உள்ள விடுதியொன்றில் சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்யப்படுவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து, குறித்த விடுதிக்கு சென்ற பொலிஸார், சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்த குற்றச்சாட்டில், நபரொருவரை கைது செய்ததுடன், மதுபானம் அடங்கிய 12 போத்தல்களையும் கைப்பற்றினர்.

இந்நிலையில், குறித்த நபர் பொலிஸ் நிலையக் சிறைக்கூடத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவேளையில் திடீரென சுகயீனமடைந்து கீழே வீழ்ந்துள்ளார்.

அதன் பின்னர் அவர் ரன்ன வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது உயிரிழந்துள்ளார். ரன்ன பிரதேசத்தைச் சேர்ந்த 61 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்நபர் உயிரிழந்ததையடுத்து பிரதேச மக்கள் நேற்று முன்தினம் எதிர்ப்பில் ஈடுபட்டனர். எவ்வாறாயினும் நோய் நிலைமை காரணமாகவே அவர் உயிரிழந்ததாக ஹங்கம பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## பண்டிகைக் காலத்தில் முடக்கம் தேவையற்றது!

கொழும்பு, டிசெ. 20

நத்தார் மற்றும் புதுவருட தினத்தை முன்னிட்டு பண்டிகைக் காலத்தில் நாட்டை மீண்டும் முடக்கவேண்டிய தேவை இல்லை என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக ஊடகங்களுக்கு தெரிவித்துள்ள அவர், இலங்கையில் அடையாளம் காணப்பட்ட ஒமைக்ரோன் நோயாளர்களில் வெளிநாட்டுப் பிரஜையைத் தவிர ஏனைய இலங்கையர்கள் குணமடைந்துள்ளனர்.

ஒமைக்ரோன் தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட வெளிநாட்டுப் பிரஜை சென்ற இடங்கள் தொடர்பான சோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எவ்வாறிருப்பினும் நாட்டை மீண்டும் முடக்கிவிடவேண்டிய தேவை இல்லை-என்றார். (அ)

## ஒன்பது வயது சிறுவன் ரயிலில் மோதுண்டு பலி!

### அளுத்கமவில் பரிதாபம்

கொழும்பு, டிசெ.20

அளுத்கம ரயில் நிலையத்துக்கு அருகில் சிறுவனொருவன் ரயில் மோதி உயிரிழந்துள்ளான்.

காலியில் இருந்து கல்கிஸ்ஸை நோக்கிப் பயணித்த ரயிலில் குறித்த சிறுவன் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

தர்காநகரைச் சேர்ந்த 9 வயது சிறுவனே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளான் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அளுத்கம ரயில் நிலையத்திலிருந்து மேற்படி ரயில் புறப்படத் தயாரானபோது, கடவையில் மறுபுறத்தில் இருந்த பெற்றோர், தம்மிடம் வருமாறு சிறுவனை அழைத்துள்ளனர்.

இதனையடுத்து, குறித்த சிறுவன் பெற்றோரிடம் செல்ல முற்பட்டபோது, தண்டவாளத்தில் தவறி வீழ்ந்து ரயிலில் மோதுண்டதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்த சிறுவனின் சடலம் களுத்துறை - நாகொட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.(அ)

## சுகாதார கட்டுப்பாட்டை மீறுவோரை கைது செய்வதற்கு விசேட சோதனை

கொழும்பு, டிசெ. 20

பொதுமக்கள் சரியான சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்றுகிறார்களா என்பதைக் கண்டறியும் வகையில், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பொலிஸார் தினந்தோறும் விசேட தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன்படி, மேல் மாகாணத்தில் நேற்று முன்தினம் முதல் கொரோனா தடுப்பு விதிகளை மீறுபவர்களைக் கண்டுபிடிக்கும் விசேட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த சோதனைகளின்போது முறையான முகக்கவசம் அணியாத நபர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். நேற்று முன்தினம் 2,881 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 2,658 ஓட்டோ தேடும் பணியில் 727 பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

மொத்தமாக 8099பேர் பரிசோதிக்கப்பட்டதாகவும் , அவர்களில் 1936 பேர் எச்சரிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டனர் எனவும் பொலிஸார் கூறினர். (அ)

## கிளிநொச்சியிலிருந்து கதிர்காமம் சென்ற பஸ் அம்பாறையில் விபத்து; 17 பேர் காயம்!

அம்பாறை, டிசெ. 20

அம்பாறை - பதியத்தலாவை பிரதேசத்தில் நேற்று அதிகாலை பஸ் ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்துக்குள்ளான பஸ் பயணித்த 17 பேர் மஹாஓயா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கிளிநொச்சியில் இருந்து கதிர்காமம் நோக்கி யாத்திரிகர்களை ஏற்றிச்சென்ற பஸ்ஸே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சாரதிக்கு நித்திரை ஏற்பட்டதால் இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாமென பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பஸ் சாரதியை கைது செய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)







# ‘26 இல் செங்கடலே’ இசைத்தட்டு வெளியீடு

வடமராட்சி, டிசெ. 20

சுனாமிப்பேரலை அனர்த்த துயர் பகிரும் ஒலி அஞ்சலி ஓசை எனும் 26 இல் செங்கடலே இசைத்தட்டு வெளியீட்டு விழா 2021 நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 7:00 மணியளவில் வடமராட்சி கிழக்கு உடுத்துறை பாரதி விளையாட்டு கழக மைதானத்தில் கலை ஊக்கி நிறுவன தலைவர் க.அன்ரனி றொபின்சன் தலமையில் இடம் பெற்றது.

இதில் மங்கல விளக்குகளை பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், இலங்கை தமிழரசு கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா, வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் கு.பிரபாகர மூர்த்தி, கட்டைக்காடு பங்குதந்தை வணபிதா பீற்றர் எல்மோ, வெற்றிலைக்கேணி நாகதம்பிரான் ஆலய பிரதம குரு ச.யோகசம்மந்தக் குருக்கள் உட்பட பலரும் ஏற்றி வைத்தனர்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினரான பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், இலங்கை தமிழரசு கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா , வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் கு.பிரபாகர மூர்த்தி உட்பட்ட அதிதிகள் எ.ராசன் என்பவருக்கு முதன்மை பிரதியை வழங்கி வைத்தனர்,

அதனை தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ச. சுகிர்தன், வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாச தலைவர் சண்முகநாதன், கிருபா சாரதி பயிற்சி பாடசாலை அதிபர் அ. கிருபாகரன், கௌரவ விருந்தினர்களாக. பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர்களான சி.பிரசாத், வே.பிரசாந்தன்,திருமதி வி.றஜிதா, சி.தியாகலிங்கம், பொ.பிறேமதாஸ்,

பொதுச் சுகாதார பரிசோதகர்களான பா.கிசோக்குமார், யோ.வசீகரன், சுனாமி ஏற்பாட்டு குழு தலைவர் இ.ஜெயரஞ்சன் ஆகியோர் உட்பட பலர் அதிதிகளாக கலந்து கொண்டு 26 செங்கடலே துயர் பகிரும் ஒலி அஞ்சலி ஓசை எனும் இறுவட்டை வழங்கி வைத்ததுடன், இச் சிறப்பு அதிதிகளுக்கான இறுவட்டுக்களும் ஏற்பாட்டாளர்களால் வழங்கி வைக்கப்பட்டன.

இதில் ஆறு பாடல்கள் வெளியீட்டு வைக்கப்பட்டன. இப் பாடல்களை வடமராட்சி கிழக்கு பாடலாசிரியர்கள், பாடகர்கள், கவிஞர்கள் கலைஞர்களால் உருவாக்கப் பட்டுள்ளனர். (அ-02)

# இலங்கை-ஜோர்ஜியா இடையே விரைவில் புரிந்துணர்வு ஒப்பந்தம்

கொழும்பு, டிசெ. 20

இலங்கைக்கும் ஜோர்ஜியாவுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, எதிர்வரும் மாதத்துக்குள் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கையின் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது.

இதன் மூலம் அதிகளவிலான ஜோர்ஜிய நாட்டு சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு ஈர்க்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

# விவசாயிகளின் உயிருடன் விளையாடுகின்றது அரசு

## எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு



கொழும்பு, டிசெ. 20

**தற்போதைய அரசாங்கம் விவசாயிகளின் உயிருடன் விளையாடுவதாகவும், இன்று விவசாயி தனது நெற்பயிர்களைப் பார்த்து பெருமூச்சு விடுவதுதான் எஞ்சியுள்ளது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

விஷம் மற்றும் மலம் கலந்த உரத்தை பயன்படுத்தும் விவசாயிகளுக்கு பல்வேறு ஒவ்வாமைகள் ஏற்படுவதாகவும், உரத்தை இறக்குமதி செய்வதன் மூலம் கறுப்பு சந்தை மாபியா உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

நாடு இன்று கடன் தரத்தில் மிகவும் கீழ் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், எதிர்காலத்தில் ஒரு கடனைக் கூட பெற முடியாத நிலைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ லுணுகம்வெஹெர பெரலிஹெல பிரதேசத்தில் “நகருக்கு நகரம் கிராமத்திற்கு கிராமம்“ வீடு வீடாகச் செல்லும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

இப்பிரதேச விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பிலும் அவர் கேட்டறிந்தார்.

# அமைச்சரவை கூட்டத்தில் பிரதமர் பங்கேற்பது சந்தேகம்

கொழும்பு, டிசெ. 20

இந்த வார அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பங்கேற்பது நிச்சயமற்றது என நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பிரதமர் தற்போது தனது குடும்பத்தினருடன் நுவரெலியாவில் உள்ள பிரதமர் இல்லத்தில் தங்கியுள்ளார்.

அரசாங்கத்தின் உட்பூசல்கள் மற்றும் இழுபறி மற்றும் எதிர்வரும் அமைச்சரவை மாற்றத்தினால் அவர் சற்று விரக்தியும் அதிருப்தியும் அடைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதன்படி, தான் மிகவும் சோர்வாக இருப்பதால் சற்று ஓய்வெடுக்க வேண்டும் என்று தன்னை அழைத்த நெருங்கிய நண்பர்கள் சிலரிடம் அவர் கூறியிருமகிறார்.

## எரிவாயு வெடிப்பு சம்பவங்கள்

# நிபுணர் குழு அறிக்கை இன்று ஜனாதிபதியிடம்

கொழும்பு, டிசெ. 20

எரிவாயு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை இன்று திங்கட்கிழமை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது.

அந்தக் குழுவின் உறுப்பினர் டப்ளியூ.டி.டப்ளியூ.ஜயதிலக இதனை தெரிவித்தார்.

இலங்கையில் கடந்த 44 நாட்களில் மாத்திரம் 727 எரிவாயு வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த நவம்பர் மாதம் முதலாம் திகதி முதல் 16ஆம் திகதி மாலை வரையான காலப் பகுதியிலேயே நாட்டின் பல பகுதிகளிலும் குறித்த வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# ஒமைக்ரோனை தவிர்க்க தடுப்பூசிகள் கட்டாயம்

கொழும்பு, டிசெ. 20

ஒமைக்ரோன் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களில் அதிகமானவர்கள் தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்கள் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக இலங்கையில் ஒமைக்ரோனால் பாதிக்கப்பட்டுள்ள நால்வரில் மூவர் தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்கள் என சுகாதார அமைச்சின் மருத்துவர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக ஒமைக்ரோன் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் உடல்நிலை மோசமாக பாதிக்கப்படவில்லை என்பதால், அவர்களை தீவிர கிசிச்சை பிரிவில் அனுமதிக்கவேண்டிய தேவை ஏற்படவில்லை எனவும் அவர் கூறினார்.

இந்த நிலையில், ஒமைக்ரோனை தவிர்ப்பதற்கு தடுப்பூசிகளை செலுத்திக்கொள்வது அவசியம் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# பிட்ச் நிறுவனத்தின் தரப்படுத்தலை பொய்யாக்க அரசாங்கம் முயற்சி

## ஐக்கிய தேசிய கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 20

இலங்கை தொடர்பில், கடன் மீளச் செலுத்துகை ஆற்றலை அடிப்படையாக கொண்டு கடன் தரப்படுத்தலை முன்னெடுத்து வரும் பிரபல சர்வதேச நிறுவனமான பிட்ச் ரேட்டிங் நிறுவனம் முன்வைத்துள்ள தரப்படுதலை, பொய் என்று கூற அரசாங்கம் தயாராகி வருவதாக ஐக்கிய தேசிய



கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.

தற்போதைய நாட்டின் வெளிநாட்டு கையிருப்பு ஜனவரி மாதம் 18ஆம் திகதியுடன் நிறைவுக்கு வருவதாகவும் அதற்குள் 500 மில்லியன் டொலர்களை கடனாக செலுத்த வேண்டியிருப்பதாகவும் அவர் கூறினார். நாடு எதிர்கொண்டுள்ள பேராபத்தின் பலனாக தற் போது நாட்டில் பால்மாவுக்கு மீண்டும் தட்டுப்பாடு ஏற்பட் டுள்ளதாகவும் அவர் குறிப் பிட்டார். (அ)



பனங்காட்டான்

**அதிகாரங்கள் பறிக்கப்பட்ட பதின்மூன்றைக் காவிக் கொண்டு இந்தியா வட்டமிட, அதை நம்பியவாறு அவர்கள் பின்னால் அறுந்த கயிற்றில் தொங்கியவாறு கூட்டமைப்பு கூடிக்கூடி பிளவுண்டு கலைய, தெற்கில் ஆழமாகப் பாதம் பதித்துள்ள சீனா வேட்டி கட்டியவாறு வடக்கில் முதலடி வைத்துள்ளது.**

# இந்தியா பதின்மூன்றுடன் அலைய சீனா வேட்டியுடன் கால் பதிக்கிறது!

இலங்கைத் தமிழரின் அரசியல் பயணம் கால்நடை யாத்திரை போன்று அங்குமிங்கும் இழுபட்டவாறு நகர்ந்து கொண்டிருக்கிறது.

உள்நாட்டுத் தீர்வா, சர்வதேச மத்தியஸ்த தீர்வா என்றுகூட நிச்சயமற்ற நிலையில் உலகநாடுகளின் தலையீடு வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் காணப்படுகிறது.

அமெரிக்கா, சீனா, இந்தியா ஆகிய மூன்றும் இதில் முன்னணி வகிக்கின்றன. அடுத்த மாதம் (ஜனவரி) அமெரிக்கா மீண்டும் ஜெனிவா மனித உரிமைப் பேரவையில் இணையவிருப்பதால், வரப்போகின்ற மார்ச் மற்றும் செப்ரெம்பர் மாத அமர்வுகள் முக்கியத்துவம் பெறலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில், இந்தியாவும் சீனாவும் தமிழரை தங்கள் பக்கம் இழுக்கும் நகர்வுகளை வீச்சாக மேற்கொள்கின்றன. இந்தியாவுக்கான இதற்குரிய ஆயுதம் 13 ஆம் திருத்தமும் அதனூடான மாகாண சபையும். சீனா மறுதிசையில் யாழ்ப்பாணத்தின் பொருளாதார அபிவிருத்தியில் தன்னை நேரடியாக ஈடுபடுத்த களத்தில் இறங்கியுள்ளது.

இலங்கைக்கான சீனத் தூதுவர் கி சென் ஹெங் தமது குழுவினர் சகிதம் வடபகுதிக்கு கடந்த வாரம் மேற்கொண்ட விஜயம் இவ்விடயத்தில் கவனம் பெற்றுள்ளது. வெளிநாட்டு ஜனாதிபதி ஒருவருக்கு வழங்கப்படும் இராணுவ - பொலிஸ் பாதுகாப்புக்கு நிகராக இவருக்கு வழங்கப்பட்டதனூடாக இவரது வகிபாகத்தை புரிந்து கொள்ள முடிகிறது.

இலங்கை மக்களின் அன்றாட வாழ்வுடன் அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் நீண்டகாலத் தொடர்புண்டு. அமெரிக்கன் மாவும், சீனப் பச்சைஅரிசியுமே இலங்கை மக்களுக்கு கூப்பனூடாக வழங்கப்பட்டதை மறந்துவிட முடியாது. அமெரிக்கன் மா இல்லையென்றால் பாண் தயாரிக்கும் பேக்கரிகள் மூடப்பட்டிருக்கும்.

1950களில் இலங்கை-சீன நாடுகளுக்கிடையில் செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் பண்டமாற்று அடிப்படையில் இலங்கை றப்பரைப் பெற்றுக் கொண்டு வெள்ளைப் பச்சை அரிசியை சீனா இலங்கைக்குக் கொடுத்தது. அன்றிலிருந்து இன்றுவரை இருநாட்டு உறவும் றப்பர் போல ஒட்டப்பட்டு இழுபடுகிறது.

கடந்த இருபது ஆண்டுகளுக்குள் சீனா மெதுமெதுவாக இலங்கையை தனக்கான தீவாக்கி விட்டது. இலங்கை சீனாவிடம் அடகு வைக்கப்பட்டு விட்டது என்றும் சொல்லலாம். அம்பாந்தோட்டை துறைமுகம், அம்பாந்தோட்டை சர்வதேச விமான நிலையம், கொழும்புத் துறைமுக கிழக்குக்கரை நகரம் என்பவை சீனாவின் பிராந்தியங்கள்.

இப்போது வடமாகாணமும் அவ்வாறாகிறது. இந்தியா துணைத்தூதரகம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் நிறுவி, திறக்கப்படாத கலாசார மண்டபத்தை யாழ். நகரின் மத்தியில் அமைத்து, இயங் காத விமானநிலையத்தை பலாலியில் புனரமைத்து, பாரதி சிலை, மகாத்மா காந்தி சிலை என்பவற்றுக்கு முன்னால் நினைவு நாட்களைக் கொண்டாடிக் கொண்டிருக்க, சீனா பொருளாதார அபிவிருத்தி என்ற பெயருடன் இங்கு காலை ஆழப் பதிக்கிறது.

பருத்தித்துறையில் சீனாவின் நவீன துறைமுகம் வரப்போவதாகச் சொல்லப்படுகிறது. பூநகரிப் பகுதியில் சீனாவின் கடலட்டைப் பண்ணை. இவ்விரு பிரதேசங்களும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுமந்திரன் மற்றும் சிறீதரனின் பகுதிகள். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கட்டுப்பாட்டிலுள்ள மூன்று தீவுகளில் சீனா உருவாக்கும் அனல் மின்நிலையங்கள். சீனாவின் வடக்குடனான உறவு மேலும் அதிகரிக்குமென சீனத் தூதுவர் யாழ்ப்பாணத்தில் கூறியுள்ளார்.

யாழ்ப்பாணத்திலும் மன்னாரிலும் சுமார் மூவாயிரத்துக்கும் அதிகமான மீனவக் குடும்பங்களுக்கு நிவாரணப் பொதிகளையும், மீன்பிடி வலைகளையும் சீனத் தூதுவர் வழங்கியுள்ளார். இந்திய மீனவர்களால் பாதிக்கப்பட்ட ஈழ மீனவர்களுக்கு சீனா கைகொடுப்பதைப் போன்று இது காட்டப்படுகிறது. 1987ல் இந்திய விமானங்கள் வடக்கின் வான்பரப்பில் பறந்து உணவுப் பொதிகளை வீசியதுதான் இதன்போது நினைவுக்கு வருகிறது.

இந்திய ஆக்கிரமிப்பு இராணுவ நடவடிக்கைகளின்போது பல்லாயிரம் தமிழர் அகதிகளாகத் தங்கியிருந்த நல்லூர்க் கோயிலையும் சீனத் தூதுவர் விடவில்லை. பட்டுக்கரை வேட்டியுடன் பாதணியின்றி கோயிலுக்குள் சென்று, வணங்கி பிரசாதம் பெற்றுள்ளது இவரது யாழ்ப்பாண விஜயத்தின் ஒரு சிறப்பம்சம்.

இவரது வடக்கு விஜயம் தொடர்பாக உச்சம் என்று சொல்லக்கூடிய இரண்டு விடயங்கள் கவனிக்கப்பட்டுள்ளது. பருத்தித்துறை கடற்கரைக்குச் சென்று, ட்ரோனை பறக்கவிட்டவாறு இங்கிருந்தே இந்தியக் கரை எவ்வளவு தூரம் என்று கேட்ட சீனத்தூதுவர், மன்னாருக்குச் சென்ற பொழுது இலங்கைக் கடற்படையின் பாதுகாப்புடன் ராமர் பாலத்தைச் சென்று பார்வையிட்டதுடன், இது முடிவல்ல ஆரம்பம் என்று கூறியதும் இந்தியாவுக்கான எச்சரிக்கை மணியாகவே பார்க்கப்பட வேண்டியது.

இந்தியா தன் பக்கத்துக்கு 13ஆவது திருத்தத்துடன் அலைகிறது. இந்தத் திருத்தத்தை விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு கோரும் தீர்மானத்தை சில நாட்களுக்கு முன்னர் கொழும்பில் கூடிய சில தமிழ் பேசும் கட்சிகள் கூட்டாக எடுத்தன. ரெலோவின் முன்னெடுப்பிலான இக்கூட்டத்தில் விக்னேஸ்வரனும், ராவுப் ஹக்கீமும், மனோ கணேசனும் பங்குபற்ற, கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தலைமை தாங்கியது நிகழ்கால அரசியல் அரங்கில் எதிர்பாராத திருப்பம்.

இந்திய அரசுக்கு அனுப்பவென இங்கு தயாரிக்கப்பட்ட ஆவணத்தில் கையொப்பமிட சம்பந்தன் உடன்படவில்லை. தமிழரசுக் கட்சியை தாம் சேர்ந்தவரென்பதால் அக்கட்சியுடன் கூடிப் பேசாது ஆவணத்தில் ஒப்பமிட அவர் மறுத்துவிட்டார். தமிழரசின் அரசியல் குழு கொழும்பில் கூடும்பொழுது இதுபற்றி சாதகமாக அல்லது பாதகமாக ஒரு முடிவு எடுக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த வாரம் சம்பந்தன் தலைமையில் கட்சிகள் கூடி 13ஆவது திருத்தத்தை இந்தியாவிடம் வலியுறுத்துவது என உரையாடிக் கொண்டிருக்கும் பொழுது, கூட்டமைப்பின் சுமந்திரன் தமது புதிய இணையர் சாணக்கியன் சகிதம் சுன்னாகத்தில் ஒரு கூட்டத்தை நடத்தினார்.

கோட்டாபயவின் புதிய அரசியலமைப்பில் (?) 13க்கும் அப்பால் சென்று அரசியல் தீர்வை தாங்கள் கோரிக் கொண்டிருக்கும் வேளையில், இதுவென்ன இன்னமும் அவர்கள் 13 ஐக் கேட்கின்றனர் என்று சுமந்திரன் குறிப்பிட்டது கொழும்புக் கூட்டத்துக்கு ஓர் அடியாக அமைந்தது. 13ஆம் திருத்தமென்றும், மாகாண சபையென்றும் இதுவரை கூறி வந்த சுமந்திரனுக்கு திடீரென என்ன ஆனது?

சுமந்திரனை ஓரங்கட்ட ரெலோ செல்வம் அடைக்கலநாதனும், இவரை ஓரங்கட்ட சுமந்திரனும் மேற்கொள்ளும் அரசியல் அடாவடி நன்றாக அம்பலத்துக்கு வந்துள்ளது. ஒற்றையாட்சிக்குள் எப்போதும் பதவிகளை வகித்துப் பழகிப்போன ராவுப் ஹக்கீமும், மனோ கணேசனும் எவ்வளவு காலத்துக்கு தமிழ்த் தேசிய கூட்டுக்குள் இணைந்திருப்பார்கள் என்பது கேள்விக்குரியது.

இந்தியாவை முன்னிலைப்படுத்தி 13ஆம் திருத்தத்தை வலியுறுத்தும் தமிழர் தரப்பின் பின்னால் 'கொள் முதல்' செய்யப்பட்ட சிலர் இயங்குவதாக புலம்பெயர் அறிவுஜீவிகள் வட்டமொன்று விலாவாரியாக விமர்சித்து வருகிறது.

தமிழ்த் தேசியம் பேசும் சில அரசியல்வாதிகள், பிரித்தானியாவிலுள்ள 'லெட்டர் ஹெட்' அமைப்பொன்று, புலம்பெயர் நாடுகளிலுள்ள அறிக்கையாளர்கள், தாயகத்திலுள்ள சில அரசியல் விமர்சகர்கள், நன்கறியப்பட்ட தாயக ஊடகர்கள் என குறிப்பிட்ட சிலர் இவ்விடயத்தில் உள்வாங்கப்பட்டு, தவறான பாதைக்கு கொண்டு செல்லப்படுகின்றனர் என்று சம்பந்தப்பட்ட அறிவுஜீவிகள் அரங்கில் தெரிவிக்கப்படுகிறது. மேலும் பல விபரங்கள் விரைவில் வெளிவரலாமென கூறப்படுகிறது.

இதற்கு அடுத்ததாக இவ்வார முக்கிய சம்பவமாக யாழ்ப்பாண மாநகரசபையின் பாதீடு (வரவு - செலவுத் திட்டம்) விவாதம் முக்கிய கவனம் பெற்றுள்ளது. தமிழர் பூர்வீக நிலத்துக்கு சொந்தம் கொண்டாடும் தமிழ்த் தேசிய நாமம் பூண்ட அரசியல் தலைவர்களும் அவர்களின் கூட்டத்தினரும் மேற்கொள்ளும் படுகேவலமான அரசியல் போக்குக்கு இதனைவிட வேறு உதாரணம் தேவையில்லை.

**(11 ஆம் பக்கம் பார்க்க...)**

**10 ஆண்டு கால கிம் ஆட்சியில் வடகொரியா - ஒரு பார்வை**



# இராணுவ பலம் முதல் மர்மத் திரை வரை...

**இந்து குணசேகர்**

வடகொரிய ஜனாதிபதியாக கிம் ஜோங் உன் தலைமையேற்று 10 ஆண்டுகள் முடிவடைந்துள்ளது. ஏவுகணை சோதனைகள் மூலம் இராணுவ பலத்தைப் பறைசாற்றியது முதல் வறட்சியின் பிடியில் தவித்த மக்களிடம் மன்னிப்புக் கோர வேண்டிய சூழலுக்கு ஆளானது வரை இவரது ஆட்சிக் காலத்தில் சொல்லப்பட வேண்டிய சரித்திரமும், வெளிவராத வரலாறும் ஏராளம்.

வடகொரிய முன்னாள் ஜனாதிபதியும் கிம் தந்தையுமான கிம் ஜோங் இல், 2011-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மரணமடைந்ததைத் தொடர்ந்து, வடகொரியாவின் ஒட்டு மொத்த ஆட்சி அதிகாரமும் 28 வயதான கிம்மின் தலைமையின் கீழ் வந்தது. ஆரம்பத்தில் கிம் இந்த பெரும் பொறுப்பை இந்த இளம் வயதில் எப்படி கையாளப் போகிறார் என்றே பலரும் சந்தேகத்துடன் கேள்வி எழுப்பினர். ஆனால், நடந்தது வேறு. வடகொரியா தனது உள்நாட்டு விவகாரங்கள் அனைத்தை யுமே இராணுவ இரகசியம் போல் பாதுகாக்கும் தன்மை கொண்ட நாடு. கிம்மின் ஆட்சியில் இது பல மடங்கு அதிகரித்தது.

வடகொரியாவில் என்ன நடக்கிறது என்பதை உலக நாடுகள் அறிந்துகொள்ள முடியாத வண்ணம் இரும்புத் திரையை வடகொரியாவை சுற்றிலும் கிம் ஏற்படுத்தினார். மேலும், தன்னைப் பற்றி புரிந்து கொள்ளப்படாத பிம்பத்தையும் கிம் இந்த 10 ஆண்டுகளில் வடிவமைத்துக் கொண்டார். இதன் காரணமாக உலகின் சக்தி வாய்ந்த தலைவராகவும் கிம் தன்னை தற்போது நிலை நிறுத்திக் கொண்டிருக்கிறார். கடந்த 10 ஆண்டுகளில் கிம் ஆட்சியில் நடந்த முக்கிய நிகழ்வுகள் இவை...

**ஏவுகணை சோதனையும், அமெரிக்க மோதலும்**

கிம்மின் ஆட்சிக்குப் பிறகு வடகொரியா உலக நாடுகளிடையே தன்னை சக்தி வாய்ந்த நாடாக மாற்றிக்கொள்ள தீவிரமாக இறங்கியது. அதன் பொருட்டு ஏவுகணை சோதனைகளில் இறங்கியது. இதன் காரணமாக அமெரிக்க - வடகொரியாவுக்கு இடையே தீவிர மோதல் நிலவியது.

வடகொரியாவின் மீது அமெரிக்கா பல்வேறு பொருளாதாரத் தடைகளை விதித்தது. மேலும், உலக நாடுகளால் வடகொரியா தனிமைப் படுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ட்ரம்புடன் சமாதான முயற்சிகளில் வடகொரிய ஜனாதிபதி இறங்கினார்.

அதன் முதல் படியாக தென்கொரிய அதிபர் மூன் ஜி இன்னை கின், கிம் சந்தித்தார். வரலாற் றுச் சிறப்பு நிகழ்வாக அமெரிக்க முன்னாள் அதிபர் ட்ரம்ப் - கிம் சந்திப்பு நடந்தது. வடகொரிய எல்லையில் ட்ரம்பை கிம் சந்தித்தார். இதன் மூலம் வடகொரியாவுக்குள் முதலில் நுழைந்த அமெரிக்க ஜனாதிபதி என்ற பெருமை ட்ரம்புக்கு கிடைத்தது.

**கொரோனா “இல்லாத” வடகொரியா?**

வடகொரியா தனது உள்நாட்டு விவகாரங்கள் அனைத்தையுமே இராணுவ இரகசியம் போல் பாதுகாக்கும். அங்கு என்ன நடக்கிறது என்ற உண்மை நிலையை உலக நாடுகள் அவ்வளவு எளிதில் அறிந்துகொள்ள முடியாது. ஊடகங்களும் அரசுக் கட்டுப்பாட்டில்தான் இயங்குகின்றன. கொரோனா பெருந்தொற்று உலகையே ஆட்டிப் படைக்கும்போதும் கூட அங்குள்ள தொற்று நிலவரம் குறித்து உண்மையான விவரம் உலகுக்கு இதுவரைகூட தெரியவில்லை.

தனது ஆயுத பலம் மற்றும் ஏவுகணைகள் பலத்தை உலக நாடுகளுக்கு வெளிகாட்டு வகையில் இந்த 10 வருடங்கள் பலமுறை இராணுவ அணிவகுப்பை கிம் நடத்தி இருக்கிறார்.

கொரோனா பரவலைத் தொடந்து, வடகொரியா தனது நாட்டின் எல்லைகளை முற்றிலுமாக மூடியது. குறிப்பாக, சீனாவுடனான வர்த்தகத் தொடர்பை நிறுத்தியதாலும், அமெரிக்காவின் பொருளாதார தடையாலும், வெள்ள சேதத்தாலும் வடகொரியா பஞ்சத்துக்கு தள்ளப்பட்டது.

இதனை இந்த ஆண்டு தொடக்கத்தில் கிம் ஜோங் உன் ஒப்புக்கொண்டு நாட்டு மக்களிடம் அவர் மன்னிப்பும் கேட்டார்.

**கிம்மின் உடல் நலம் குறித்த சர்ச்சை**

கடந்த ஏப்ரல் மாதத் தொடக்கத்தில் கிம்முக்கு இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டதாகவும், அதனைத் தொடர்ந்து கிம்மின் உடல் நிலை மோசமானதாகவும் அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. எனினும் தான் நலமாக இருப்பதாக அடுத்தடுத்து பொது நிகழ்வுகளில் தோன்றி கிம் அச்செய்திகளுக்கு மறைமுகமாக மறுப்பு தெரிவித்தார்.

▸▸ 2013 ஆம் ஆண்டும் கிம்மின் மாமா ஜாங் சாங் தேக் தேச துரோக குற்றத்துக்காக கிம்மின் உத்தரவின் பேரில் கொல்லப்பட்டதாக கூறப்படுகிறது.

கிம் ஜோங் இல்லின் மூத்த மகன் கிம் ஜோங் நாம்தான் அடுத்த அரசியல் வாரிசு என்று வட கொரிய மக்கள் நினைத்துக் கொண்டிருக்க, எதிர்பாராத விதமாக ஜப்பானுக்கு போலி பாஸ்போர்டில் நுழைந்த காரணமாக தன் ஆட்சி வாய்ப்பை நாம் இழந்தார். 2003 இல் வட கொரியாவிலிருந்து வெளியேற்றப்பட்டார். அதனைத் தொடர்ந்து வட கொரியா அரசை அவர் கடுமையாக விமர்சித்து வந்தார்.

இந்த நிலையில், 2017 ஆம் ஆண்டு மலேசிய தலைநகர் கோலாலம்பூர் விமான நிலையத்தில் கிம் ஜோங் உன்னின் சகோதரர் கிம் ஜோங் நாம் மர்ம முறையில் கொலை செய்யப்பட்டார். இந்த கொலையின் பின்னணியில் கிம் ஜோங் உன் தான் உள்ளார் என்று பரவலாக பேசப்பட்டது.

அமெரிக்காவைச் சேர்ந்த 22 வயதான ஓட்டோ வார்ம்பியர் வடகொரியாவுக்கு சுற்றுலா சென்றிருந்தபோது அந்நாட்டை உளவு பார்த்ததாகக் கூறி வடகொரிய அரசு அவரை கைது செய்தது. பின்னர் பல்வேறு பேச்சுவார்த்தைகளுக்கு பின்னர் அவர் விடுவிக்கப்பட்டார். ஆனால், அமெரிக்கா வந்தடைந்த ஓட்டோ வாம்பியர் சில மாதங்களிலே மரணம் அடைந்தார். இந்த விவகாரமும் கிம்முக்கு சிக்கலை ஏற்படுத்தியது.

இதுமட்டுமல்லாது கிம்மின் ஆட்சியில் மரணத் தண்டனைகள் அதிக அளவில் நிறைவேற்றப்பட்டுள்ளதாக மனித உரிமை அமைப்புகள் விமர்சித்துள்ளன.

**சகோதரிக்கு அதிகாரம்**

வடகொரிய ஜனாதிபதி கிம்மின் சகோதரி கிம் யோ ஜாங், கிம்முக்கு அடுத்து சக்தி வாய்ந்த நபராக அந்நாட்டில் கடந்த பத்து வருடங்களாக அறியப்படுகிறார். கிம் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட காலத்திலிருந்தே, தன்னுடைய சகோதரி கிம் யோ ஜாங்குக்கு அரசியலில் முக்கியப் பொறுப்புகள் வழங்கி வருகிறார்.

உண்மையில் வடகொரிய ஜனாதிபதி கிம் குறித்து வரும் செய்திகளும், வடகொரியா பற்றிய தகவல்களும் பெரும்பாலும் நேரடியாக களம் சென்று தரப்படுப்பவை அல்ல. அமெரிக்க ஊடகங்களோ, சர்வதேச ஊடகங்களோ, தென் கொரிய ஊடகங்களோ அளிக்கும் செய்தி வாயிலாகவே கிம் பெரும்பாலும் உலக மக்களுக்கு அறியப்படுகிறார். இவ்வாறு இருக்கையில் இதுதான் கிம்மின் நிஜ பிம்பம் என்று உறுதிப்பட கூறுவது நியாயமற்றது. அறத்திற்கு முரணானதும் கூட.




எது எவ்வாறு இருப்பினும், ஊடகங்கள் கிம் மீது வைக்கும் சர்ச்சைகளைத் தவிர்த்து, பார்த்தோம் என்றால் கிம் கடந்த 10 ஆண்டுகளில் பல்வேறு பொருளாதாரத் தடைகளைத் தாண்டி நாட்டை வளர்ச்சி பாதையிலேயே கொண்டு சென்றிருக்கிறார். அறிவியல் வளர்ச்சி, விவசாயம் என வடகொரியாவை அடுத்தக் கட்டத்திற்கு கிம் நகர்த்தியுள்ளார் என்பதை மறுப்பதற்கில்லை என்கின்றனர் சர்வதேச பார்வையாளர்கள். எனினும், “கிம் நல்வரா, கெட்டவரா?” - இந்தக் கேள்வி மட்டும் விடையின்றி தொடரும். ■

# புலமைச் சிகரம்


## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வி னாத்தாள்
நேரம் : 1 மணித்தியாலம்

55. எவ் மின்சுற்று இதில் ஒளிரக் கூடியது?

(1)

(2)

(3)



56. போலியான, தரக்குறைவான பண்டங்கள், சேவைகள் விற்பனை செய்யப்படுகின்றதெனின் அவை தொடர்பாக எங்கு சென்று அறிவிக்க வேண்டும்?
(1) பிரதேச செயலாளர் அலுவலகம்
(2) கிராம அதிகாரி அலுவலகம்
(3) நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை

57.

இவ் நீர்ச்சுழலி சுழலும் வேகத்தை அதிகரிக்க யாது செய்யலாம்?
(1) சக்கரத்தில் விழும் நீரோட்டத்தின் வேகத்தைக் குறைத்தல்.
(2) சக்கரத்தில் விழும் நீரோட்டத்தின் வேகத்தை அதிகரித்தல்.
(3) சக்கரத்தைப் பெரிதாக அமைத்தல்.

58. நெருப்புக் காய்ச்சல், கல்லீரல் அழற்சி போன்ற நோய்கள் ஏற்படுவதற்கான காரணமாக அமைவது
(1) அசுத்த நீரைப் பயன்படுத்தல்.
(2) பழுதடைந்த உணவை உண்ணுதல்.
(3) நோய்க்காவியான நுளம்பு தீண்டுதல்.

59. இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்து சேவையில் மாணவர்களாகிய நீங்கள் அடையக் கூடிய நன்மைகளில் ஒன்று.
(1) இலவசமாகப் பயணிக்கமுடியும்.
(2) குறைந்த செலவில் பருவகாலச்சீட்டினைப் பெற்று பயணிக்கமுடியும்.
(3) விரும்பிய இடத்திற்கு பணமின்றிச் செல்லமுடியும்.

60. தரப்பட்ட காட்சிப்படத்தை அவதானித்து ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருக்கக் கூடியவாறு மூன்று வாக்கியங்கள் எழுதுக.



1) ....................................................................................................

2) ....................................................................................................

3) ....................................................................................................

1. பின்வரும் பந்தியை வாசியுங்கள்.

கிராமம் முழுவதும் கடும் வறட்சி நிலவியது. காட்டு மரம் செடி கொடிகள் யாவும் கருகிக் கிடந்தன. விட்டுவிட்டு வீசுகின்ற அனல் காற்றினால் மக்கள் அவதிப்பட்டனர். கிராமத்தினூடாகப் பாய்ந்து சென்ற ஆறும் வற்றிவறண்டு போயிற்று. கிராமவாசிகளுக்குக் குடிப்பதற்குத் தானும் ஒரு துளி நீரும் கிடைக்கவில்லை. மிருகங்கள் தமக்குச் சௌகரியமான இடங்களை நோக்கிச் சென்றன. மூத்த கிராமவாசிகள் தமது சொந்த இடங்களை விட்டுத் தாமும் போக நேரிடுமோ என்று அஞ்சி அஞ்சிக் காலங் கழித்தனர்.

- பந்தியை **மாத்திரம்** துணையாகக் கொண்டு விடையளிக்குக.

(i) மரம் செடி கொடிகள் கருகிக் கிடந்தமைக்குக் காரணமான இயற்கை இயல்பு எது?
: ....................................................................

(ii) மக்கள் எதனால் அவதிப்பட்டனர்? : ....................................................................


(iii) இணைமொழி ஒன்றினைத் தருக. : ....................................................................

(iv) 'இளைய' என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக. : ........................................

(v) மிருகங்கள் எவ்வாறான இடங்களை நோக்கிச் சென்றன? : ........................................

(vi) சொந்த இடங்களை விட்டுப் போக நேரிடுமோ என்ற அச்சத்துடன் இருந்தவர்கள் யார்?
: ....................................................................

### விடைகள்

| | | |
|---|---|---|
| 55. | (3) |  |
| 56. | (3) | நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை |
| 57. | (2) | சக்கரத்தில் விழும் நீரோட்டத்தின் வேகத்தை அதிகரித்தல் |
| 58. | (1) | அசுத்த நீரைப் பயன்படுத்தல். |
| 59. | (2) | குறைந்த செலவில் பருவகாலச்சீட்டினைப் பெற்று பயணிக்கமுடியும். |

60. பொருத்தமான வாக்கியங்கள் எழுதியிருப்பின் புள்ளி வழங்குக.

1. (i) *வறட்சி*
(ii) *அனல் காற்றினால்*
(iii) *வற்றிவறண்டு*
(iv) *மூத்த*
(v) *சௌகரியமான*
(vi) *மூத்த கிராமவாசிகள்*

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டால் மட்டுமே நாட்டுக்கு எதிர்காலம் உண்டு

## ராஜித எம்.பி. சுட்டிக்காட்டு



கொழும்பு, டிசெ. 20

“தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டால் மட்டுமே இந்நாட்டுக்கு எதிர்காலம் உண்டு. இன ஐக்கியம் இல்லாவிட்டால் ஒரு போதும் நாட்டை அபிவிருத்தி நோக்கி அழைத்துச்செல்ல முடியாது.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது, அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல் படுத்திக்கொள்வதற்கு தமிழ் பேசும் கட்சிகள் ஒன்றிணைந்துள்ளமை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“தமிழ், முஸ்லிம் மக்களுடன் நாம் எவ்வளவு சகோதரத்துவத்துடன் வாழ்கின்றோம் என்பதில்தான் இந்த நாட்டின் வளர்ச்சி தங்கியுள்ளது. இன ஐக்கியம் இல்லாவிட்டால் எந்தவொரு நாட்டையும் கட்டியெழுப்ப முடியாது. 1956 இல் தனிச்சிங்கள மொழி சட்டம் கொண்டுவரப்பட்டு எமது நாட்டில் அழிவுக்கான பாதை ஆரம்பித்துவைக்கப்பட்டது. ஒரு மொழியென்றால் இரு நாடுகள், இரு மொழிகளென்றால் ஒரு நாடு என அன்றே கொல்வின் ஆர்.டி.சில்வா எடுத்துரைத்தார். அவர் கூறியது போன்று இங்கு நடந்தது.

சிங்கப்பூரின் தந்தையென போற்றப்படும் லீகுவான், முதலில் இன ஐக்கியத்தையே கட்டியெழுப்பினார். சிங்கப்பூரில் 75 வீதம் சீனர்கள் வாழ்ந்தாலும் மலேசிய மொழியில் தேசிய கீதம் எழுதப்பட்டது. இந்தியருக்கு வெளிவிவகார அமைச்சு பதவி வழங்கப்பட்டது.

இப்படிதான் இனங்களுக்கிடையில் நம்பிக்கையை ஏற்படுத்தி, இன ஐக்கியம் மூலம் சிங்கப்பூரை லீ குவான் கட்டியெழுப்பினார்.

ஆனால், எமது நாட்டில் இனங்களுக்கிடையில் பிளவை ஏற்படுத்தினர். அதனால்தான் நாடு முன்னேறவில்லை. எனவே, இனியாவது பொது இணக்கப்பாட்டுக்குவந்து பேச்சு நடத்தி, பிரச்சினையைத் தீர்க்காவிட்டால் இந்த நாட்டுக்கு எதிர்காலம் இல்லை. இதனை நான் 70 முதல் வலியுறுத்தி வருகின்றேன். அதற்காகக் குண்டுத் தாக்குதலும் நடத்தினர். இன்றும் அதையே சொல்கின்றேன்” - என்றார். (இ)

## நேற்று வரை 792 எரிவாயு வெடிப்புகள்



கொழும்பு, டிசெ. 20

நாடளாவிய ரீதியில், நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில், எரிவாயு வெடிப்பு தொடர்பான 22 சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த நவம்பர் மாதம் முதலாம் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் 792 எரிவாயு வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இதில் 90 சம்பவங்கள் எரிவாயு அடுப்பில் ஏற்பட்ட சேதங்கள் என்றும் பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது. (இ)

## பொலிஸ் விசேட அதிரடிப் படையின் சுற்றிவளைப்புகளில் 11 பேர் கைது!

கொழும்பு, டிசெ. 20

பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய 11 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக 7 மதுபான சுற்றிவளைப்புகளில் எழுவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் 100.5 லீற்றர் மதுபானம் கைப்பற்றப்பட்டுள்ளது. இதன் போது 5 லீற்றர் கோடா, இரண்டு செப்புத் தகடுகள், 1 மோட்டார் சைக்கிள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கேகாலை, திம்புல்கமுவ பிரதேசத்தில் அனுமதிப்பத்திரமின்றி லொறியொன்றில் ஒரு தொகை மரக்குற்றிகளை ஏற்றிச் சென்ற நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கேகாலை பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, பூகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குமாரிமுல்ல பிரதேசத்தில், அனுமதிப்பத்திரமின்றி களனி கங்கையில் மணல் அகழ்ந்து அதனை லொறியில் ஏற்றிக் கொண்டிருந்த இருவரைப் பூகொட பொலிஸார் கைது செய்துள்ளனர். பூகொட பிரதேசத்தை சேர்ந்த 39, 44 வயதுகளையுடைய இருவரே கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதன்போது டிப்பர் ரக வாகனமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

மீரிஹான பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், கத்தியைக் காட்டி வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவர் வெயாங்கொட மாளிகாதென்ன பிரதேசத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். இதன் போது சந்தேகநபரிடமிருந்து மோட்டார் சைக்கிள் மற்றும் 3 தொலைபேசிகள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன. வெயாங்கொடைப் பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயது நபரே கைது செய்யப்பட்டுள்ளார். (இ)

## கோயிலிலேயே கொள்ளை; தீவிர விசாரணை ஆரம்பம்

நுவரெலியா, டிசெ. 20

நுவரெலியா, கந்தபளை, கோர்ட்லோஜ் கோயிலில் இருந்த மின்குமிழ்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

கோர்ட்லோஜ் மலை உச்சியிலுள்ள பழமையான இந்துக் கோயில் அப்பகுதியில் பிரசித்தி பெற்ற கோயிலாக விளங்கி வருகின்றது.

இந்தக் கோயிலுக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதிமிக்க மின்குமிழ்களே இவ்வாறு கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பொது மக்கள், பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதையடுத்து சம்பவ இடத்தைப் பார்வையிட்ட கந்தப்பளைப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ)



## ஓட்டோவைப் பந்தாடியது கார் இருவர் வைத்தியசாலையில்!

நுவரெலியா, டிசெ. 20

சாரதி பயிற்றுவிப்பு பாடசாலையால் ஓட்டோ ஒன்றுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டுக் கொண்டிருந்தபோது, கார் ஒன்று குறித்த ஓட்டோவுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இதனால் ஓட்டோவில் பயணித்த இரு ஆண்கள் படுகாயமடைந்துள்ளனர். அவர்கள் சிகிச்சைகளுக்காக கொட்டகலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கொட்டகலை பிரதேச வைத்தியசாலைக்கு அருகாமையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

தலவாக்கலையில் இருந்து கொட்டகலை வரை பயிற்சிக்காகப் பயன்படுத்திய ஓட்டோ, கொழும்பு கடுவலையில் இருந்து நுவரெலியா நோக்கிச் சென்ற கார் ஒன்றின் மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

காரில் மோதுண்ட ஓட்டோ பாதையை விட்டு விலகி அருகில் இருந்த பள்ளத்தில் விழுந்துள்ளது.

விபத்து தொடர்பில் திம்புள பத்தனைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## இந்தியா பதின்மூன்றுடன்...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கடந்த சில வாரங்களாக தமிழர் தாயக பிரதேச சபைகளின் பாதீடுகள் தோல்வியடைந்ததையும் அதனால் அவைகளின் தலைவர்கள் பதவி இழந்ததையும் பார்த்து வந்துள்ளோம். சிங்கள தேசிய அரசியல் கட்சிகளால் இந்தத் தோல்விகளும் பதவி இழப்புகளும் இடம்பெறவில்லை. மாறாக, தமிழ்த் தேசிய கட்சிகளின் அரசியல் லாபப் போட்டியே இதற்கு மூல காரணம். இதுபோன்ற ஒன்றே யாழ்ப்பாண மாநகரசபையிலும் இந்த மாதம் 15ஆம் திகதி எதிர்பார்க்கப்பட்டது.

இச்சபை நாற்பத்தைந்து உறுப்பினர்களைக் கொண்டது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பு - 16. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி - 13. ஈ.பி.டி.பி. - 10. ஐக்கிய தேசிய கட்சி - 3. சிறிலங்கா சுதந்திரக் கட்சி - 2. தமிழர் விடுதலைக் கூட்டணி - 1.

ஆரம்பத்திலேயே பிளவுபடாமல் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் இணைந்து (மொத்தம் 29), ஒப்பந்த அடிப்படையில் ஆட்சியைக் கைப்பற்றியிருக்க முடியும். அப்படி இடம்பெற்றிருந்தால் இரு கட்சியினரதும் சார்பில் மாநகர முதல்வர் பதவி இரு தரப்புக்கும் சமமாக காலப்பங்கீடு செய்யப்பட்டிருக்கும். இது நடைபெறவில்லை.

முன்னைய முதல்வர் ஆர்னோல்டுக்குப் பின்னர் மணிவண்ணன் இப்பதவிக்கு போட்டியிட்டபோது அவர் அங்கத்துவம் வகித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்குள் ஏற்பட்ட பிளவினால் பத்துப் பேர் மணிவண்ணன் பக்கம் செல்ல, மீதி மூவர் மட்டுமே முன்னணியுடன் சென்றனர். இவ்வேளையில் தமிழ்த் தேசிய கட்சிகள் இரண்டும் ஆட்சி அமைக்கக் கூடாதென்பதற்காக ஈ.பி.டி.பி.யும் சிங்களக் கட்சிகளும் மணிவண்ணனுக்கு ஆதரவாகச் செயற்பட்டு அவர் முதல்வராக வாய்ப்பளித்தன.

இதே நிலைப்பாடே கடந்த பதினைந்தாம் திகதி இடம்பெற்ற பாதீடு வாக்களிப்பிலும் இடம்பெற்று மணிவண்ணனைக் காப்பாற்றியது. இம்முறை மணிவண்ணனுக்கு ஈ.பி.டி.பி. ஆதரவளிக்காது என்ற நினைப்பில், கூட்டமைப்பினர் தங்களுக்குள் கூடி புதிய முதல்வரையும் தயாராக வைத்திருந்த விபரம் ஈ.பி.டி.பி.க்கு தெரிய வந்ததால், அது சரியாகக் காய் நகர்த்தி மணிவண்ணனை தொடர்ந்து முதல்வராக்கியுள்ளது.

இதனை மணிவண்ணனின் வெற்றி என்பதைவிட கூட்டமைப்புக்குக் கிடைத்த படு தோல்வி என்பதே சரி. இந்த அரசியல் சதுரங்கத்தில் ஈ.பி. டி.பி. தன் பங்கை சரியாக விளையாடியுள்ளது. தமிழ்த் தேசிய கட்சிகளை ஒரு கூட்டாக அமைத்து, தாயகத்திலுள்ள மக்கள் சபைகளைக் காப்பாற்ற லாயக்கில்லாத நிலைக்குச் சென்றுள்ள கூட்டமைப்பு, தமிழரின் அரசியல் அபிலாசைகளை எவ்வாறு, எப்படி நிறைவேற்றப் போகிறது? ▌



## பிலிப்பைன்ஸில் சூறாவளி உயிரிழப்பு 75 ஆக உயர்வு

மணிலா, டிசெ. 20

பிலிப்பைன்ஸைத் தாக்கிய புயல் காரணமாக குறைந்தது 75 பேர் உயிரிழந்துள்ளனர் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சுமார் 195 கி.மீ. வேகத்தில் வீசிய புயல் காரணமாக 300,000 பேர் இடம்பெயர்ந்துள்ளன எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளதால் இழப்பு குறித்து முழுமையாக அறிவிக்கப்படவில்லை.

போஹோலின் தற்போதைய இறப்பு எண்ணிக்கை 49 ஆக உள்ளது. மேலும் குறைந்தது 10 பேரைக் காணவில்லை என்று ஆளுநர் யாப் கூறினார்.

கடந்த சனிக்கிழமையன்று, பிலிப்பைன்ஸின் பேரிடர் நிறுவனம், போஹோல் உட்பட இறந்தவர்களின் எண்ணிக்கை 31 ஆக இருந்ததாகக் கூறியது.

இதேவேளை நாட்டின் மிக மோசமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளில் ஆயிரக்கணக்கான இராணுவம், கடலோர காவல்படை மற்றும் தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டுள்ளனர். (அ)

# ஒமைக்ரோன் அலையைச் சமாளிக்க நாட்டை மூடி முடக்கியது நெதர்லாந்து

## உணவகங்கள், கடைகள், பள்ளிகள் ஜனவரி 14 வரை திறக்கப்படமாட்டா

அம்ஸ்ரடாம், டிசெ. 20

நெதர்லாந்தில் நேற்று அதிகாலை 5மணி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் பொது முடக்கக் கட்டுப்பாடுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. உணவகங்கள், அருந்தகங்கள், அவசியமில்லாத கடைகள், உயர்கல்வி நிறுவனங்கள் என்பன அடுத்த ஆண்டு ஜனவரி 15 ஆம் திகதி வரை மூடப்படுகின்றன. இயன்றவரை வீடுகளில் தங்கியிருங்கள். 1.5 மீற்றர் இடைவெளி பேணுங்கள் என்று மக்களிடம் அரசு கேட்டிருக்கிறது.



ஒரு வீட்டுக்கு வளர்ந்தவர்கள் இரண்டு பேர் மாத்திரமே ஒரு நாளில் விருந்தினராக வர முடியும். அத்தியாவசிய வர்த்தக நிலையங்கள், மருந்தகங்கள் போன்றவற்றை இரவு 20.00 மணிவரை திறக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. உள்ளக விளையாட்டரங்குகள், பொழுதுபோக்கு மையங்கள், சினிமா போன்றனவும் மூடப்படுகின்றன.

கொரோனா வைரஸின் ஒமைக்ரோன் வடிவத்தின் தீவிரமான தொற்றலையை அடுத்துவருகின்ற நாட்களில் நாடு சந்திக்கின்ற நிலை ஏற்பட்டிருப்பதை அடுத்தே- ஐரோப்பாவில் முதல் நாடாகப்- பொது முடக்கத்தை நெதர்லாந்து அரசு அறிவித்திருக்கிறது.

முடக்கக் காலப்பகுதியில் பொது மக்கள் ஒன்று கூடுவதைத் தவிர்ப்பதுடன் மூன்றாவது பூஸ்ரர் தடுப்பூசி ஏற்றிக் கொள்வதற்கு இக்காலத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று நாட்டின் சுகாதார அமைச்சர் ஹியூகோ டி ஜொன்கே கேட்டிருக்கிறார். பிரதமர் மார்க் ருட்டே கூறுகையில், வரும் வாரங்களில் நாடு எதிர்கொள்ள விருக்கும் தொற்று நிலைமையில் புதிய பொது முடக்கம் தவிர்க்க முடியாத ஒன்று எனத் தெரிவித்திருக்கிறார்.

வருடத்தில் மக்கள் பொருள் களைக் கொள்வனவு செய்கின்ற முக் கிய நாட்களில் பொது முடக்கம் அறிவிக்கப்பட்டிருப்பது நாடு முழு வதும் அதிர் வலைகளை ஏற்படுத்தி இருக்கிறது. நேற்றுக் கட்டுப்பா டுகள் அறிவிக் கப்படு வதற்கு சில மணி நேரம் முன்பதாக நத்தார்ப் பொருள்களை வாங்குவதற்கு மக்கள்முண்டியடித்ததால் சில நகரங்களின் கடைத் தெருக்களில் நெரிசல் காணப்பட்டது. நகரின் மையப் பகுதிக்கு வந்து பெரும் எண்ணிக்கையில் ஒன்று கூட வேண் டாம் என்று றொட்டடாம் நகர நிர்வாகம் மக்களைக் கேட்டுள்ளது.

ஒமைக்ரோன் திரிபு அடுத்து வரும் வாரங்களில் ஐரோப்பாவில் ஆதிக்கம் செலுத்துகின்ற வைரஸாக மாறும் என்று நிபுணர்கள் எச்சரித்துள்ள நிலையில் பல நாடுகளும் கட்டுப்பாடுகளை இறுக்கி வருகின்றன. (அ)

## மின்னல் வேகத்தில் பிரான்ஸை ஆக்கிரமிக்கிறது ஒமைக்ரோன்

பாரிஸ், டிசெ. 20



மக்களை வீடுகளுக்குள் முடக்கும் விதமான எந்த அறிவிப்புகளையும் பிரான்ஸ் அரசு விடுக்கவில்லை. ஆனாலும் பெரிய அளவில் ஒன்றுகூடுவதையும் விருந்துண்பதையும் தவிர்க்குமாறு அரசு நாட்டு மக்களிடம் கேட்டிருக்கிறது.

இதனை பாதுகாப்புச் சபைக் கூட்டத்தின் இறுதியில் அறிவித்த பிரதமர் ஜீன் காஸ்ரோ, டிசெம்பர் 31 அன்று வருட இறுதிநாளில் இன்னிசைக் களியாட்ட நிகழ்வுகளும் வாண வேடிக்கைக் காட்சிகளும் தடைசெய்யப்படுவதாகவும் தெரிவித்திருக்கிறார்.

வருட இறுதி ஒன்று கூடல்களில் கலந்து கொள்வோர் முன்னதாகவே தங்களை வைரஸ் பரிசோதனை செய்து கொள்ளுமாறும் அரசு ஆலோசனை தெரிவித்துள்ளது. வாண வேடிக்கை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யவேண்டாம் என்று நகர சபைகளிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

பிரதமர் தனது உரையின் ஆரம்பத்தில் நாட்டில் வைரஸின் ஐந்தாவது அலை அதன் உச்ச வேகத்துடன் பாதிப்புகளை ஏற்படுத்திவருகின்றது.டெல்ரா திரிபை விடப் பரவும் தன்மை கூடிய புதிய ஒமைக்ரோன் திரிபு அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் நாடு முழுவதும் பரந்து பீடிக்கும் என்று மதிப்பிடுவதாகத் தெரிவித்தார்.

இரண்டாவது மற்றும் மூன்றாவது தடுப்பூசிகளுக்கு இடைப்பட்ட கால இடைவெளி ஐந்து மாதங்களில் இருந்து நான்கு மாதங்களாகக் குறைக்கப்பட்டுள்ளது. ஒருவர் இரண்டாவது ஊசி ஏற்றி நான்கு மாதங்கள் கடந்திருந்தால் வரும் ஜனவரி மூன்றாம் திகதி முதல் மூன்றாவது ஊசிக்கு விண்ணப்பிக்க முடியும். மருத்துவமனைப் பணியாளர்களது மேலதிக நேரக் கடமைக்கான கொடுப்பனவுகள் அடுத்த வாரம் தொடக்கம் இரட்டிப்பாக வழங்கப் படும் -என்றும் பிரதமர் தெரிவித்தார்.

இதேவேளை, தற்சமயம் புழக்கத்தில் உள்ள சுகாதாரப் பாஸை தடுப்பூசிப் பாஸாக மாற்றுவதற்கான சட்ட மூலம் ஒன்றை விரை வில் அரசு பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கும் என்ற தகவலையும் பிரதமர் அறிவித்தார்.

அதிபர் மக்ரோன் மாலி நாட்டுக்கு மேற்கொள்ளவிருந்த பயணத்தைத் தொற்று நிலைவரம் மோசமடைந்துள்ள காரணத்தால் நிறுத்தியுள்ளார் என்று அறிவிக்கப்பட் டிருக்கிறது.பிரதமரும் ஜோர்தான் நாட் டுக்கான தனது புத்தாண்டுப் பயணத்தைக் கைவிட்டுள்ளார். (அ)

# உலகையே உலுக்கிய 6 ஒட்டகச் சிவிங்கிகள்!

நீராகாரம் இன்றி மனிதர்கள் உயிர் துறக்கின்ற காலம் வெகு விரைவில் வரப்போகின்றது என்பதற்கு கட்டியம் கூறும் பல நிகழ்வுகள் உலகெங்கும் பதிவாகி வருகின்றன. இது ஆபிரிக்க நாடான கென்யாவில் நடந்தது.

தண்ணீர் தேடி அலைந்த ஆறு ஒட்டகச் சிவிங்கிகள் சேற்று நிலப் பகுதி ஒன்றில் ஒன்றாக உயிர் துறந்து கிடக்கின்ற இந்தப் படம் உலகெங்கும் வெளியாகிப் பல பில்லியன் பார்வைகளைப் பெற்றுள்ளது. நீரின்றி விலங்குகள் உயிரிழப்பது ஆங்காங்கே நடக்கின்ற சிறு சம்பவங்கள் தான். ஆனால் முற்றாக அழிவடையும் ஆபத்து விளிம்பில் உள்ள அரிய இனச் சிவிங்கிகள் ஆறு இப்படி ஒன்றாக மடிந்து கிடந்த காட்சி உலகிற்குச் சொல்லுகின்ற செய்தி மிகப் பெரியது என்கின்றனர் சூழல் அறிவியலாளர்கள்.

தலைகள் ஒருபுறமாகவும் கால்கள் எதிர்ப்புறமாகவும் கிடக்கும் ஆறு சிவிங்கிகளது எலும்புகள் மீது தோல் மட்டுமே போர்த்திக் காணப்பட்டாலும் அவற்றின் முகங்களில் தண்ணீர் தாகம் இன்னமும் மறையவில்லை என்று கென்யாவின் வனவிலங் கியல் அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

நீர் நிலைகளைத் தேடி நீண்ட தூரம் வந்த சிவிங்கிகள் நீர் வற்றிய சேற்று நிலத்தில் கால்கள் சிக்கி மீட்க முடியாத உடல் வலுவற்ற நிலையில் அவ்விடத்திலேயே உயிரிழந்துள்ளன.கென்யா வின் ஷாபுலி வனவிலங்கு சரணாலயத்தினர் அவற்றை மீட்டெடுத்துத் தரையில் போட்டிருந்த இந்தக் காட்சியை வான் வழிப் படமாக்கியிருப்பவர் சுயாதீனப் படப்பிடிப்பாளர் எட் ராம். அதிர்ச்சியூட்டும் அந்தப் படம் சமூக வலைத்தளங்களில் சுமார் ஐம்பது லட்சம் பேரால் பகிரப்பட்ட பிறகே செய்தி நிறுவனங்கள் அதனைக் கண்டு கொண்டன.

கென்யா அண்மைக் காலத்தில் கடும் வரட்சியைச் சந்தித்துள்ளது. மழை வீழ்ச்சி குறைந்ததால் அங்கு தேசிய அனர்த்த நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. வரட்சி முதலில் வன விலங்கு களையே மோசமாகத் தாக்கியுள்ளது.



உணவு, நீர் இன்றி அவை வலுவிழந்துமடிந்து வருகின்றன. வரட்சியை அடுத்து விவசாயிகள் நீர் நிலைகள் அருகே விலங்குகள் அண்டாமல் வேலிகளை அமைத்துப் பயிர்ச் செய்கைகளில் ஈடுபடுவதால் வன விலங்குகளுக்கு தண்ணீர் கிடைப்பது தடுக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. இவ்வாறு சூழல் பாதிப்புகள்

இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையிலான மோதலாகவும் மாறிவருகிறது. (அ)



## பாகிஸ்தானின் வங்கியில் வெடிவிபத்து; 14 பேர் பலி!

கராச்சி, டிசெ. 20

பாகிஸ்தானின் தெற்கு நகரமான கராச்சியில் உள்ள வங்கி ஒன்றில் ஏற்பட்ட வெடிப்புச் சம்பவத்தில் குறைந்தது 14 பேர் உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கழிவுநீர் வடிகாலில் இருந்து வந்த வாயு கசிவு காரணமாக ஏற்பட்டதாக நம்பப்படும் இந்த குண்டு வெடிப்பில் மேலும் பலர் காயம் அடைந்துள்ளனர்.

இடிபாடுகளில் பலர் புதையுண்டுள்ளதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ள நிலையில் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.

ஹபீப் வங்கி கட்டடத்தின் ஜன்னல்கள் மற்றும் கதவுகள் வெடித்து சிதறியதையும், வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டதையும், ஆவணங்கள் தெரு முழுவதும் சிதறிக் கிடப்பதையும் காணொளி காட்சிகள் காட்டுகின்றன. (அ)

# “சென் நதி ஒலிம்பிக்” மாதிரிக் காட்சிகள் வெளியாகின!





வரலாற்றில் முதல் தடவையாக திறந்த வெளியில் ஆரம்ப விழா உலகப் பெரு விளையாட்டு விழாவின் ஆரம்ப நிகழ்வுகள் இதுவரை மூடிய உள்ளரங்குகளிலேயே நடைபெற்று வந்திருக்கின்றன. பாரிஸில் 2024இல் நடைபெறவுள்ள ஒலிம்பிக்கில் இந்த மரபு அடியோடு மாறுகிறது. ஆரம்ப நிகழ்வையும் நிறைவு வைபவத்தையும் நகரின் மையப்பகுதியில் திறந்த வெளியில் நடத்துவது என்ற பிரான்ஸின் திட்டங்கள் இறுதி செய்யப்பட்டுள்ளன.

அதிபர் மக்ரோனுடைய அந்த விருப் பத்தைச் செயல் படுத்துகின்ற முடிவைப் பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகளை ஒழுங்குபடுத்துகின்ற குழுவின் பணிப்பாளர் சபை இந்த வாரம் வெளியிட்டுள்ளது.

சர்வதேச ஒலிம்பிக் குழுவும் அதற்குத் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

பாரிஸ் நகரின் மையத்தில் ஈபிள் கோபுரப் பகுதியை உள்ளடக்கிச் செல்லுகின்ற சென் நதியின் நீளத்தில் சுமார் ஆறு கிலோ மீற்றர்கள் பகுதியில் நதி மீதும் அதன் அழகிய கரையோரங்களிலும் பல்லாயிரக் கணக்கான உலக வீரர் கள் கலந்து கொள்ளும் தொடக்க நிகழ்வு நடைபெறவிருக்கிறது.

திறந்த-பரந்த-அப்பிரதேசத்தில் போட்டியின் ஆரம்ப நிகழ்வைக் கண்கொள்ளாக் காட்சியாக எப்படி நடத்துவது என்பதை மாதிரிக் காட்சிகளாகத் தயாரித்துள்ளது பாரிஸ் ஒலிம்பிக் குழு. அவற்றையே படங்களில் காண்கிறீர்கள்.

சென் நதியில் le pont d'Austerlitz பாலத்துக்கும் le pont d'Iéna பாலத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் இரு நூறு நாடுகளது 10 ஆயிரத்து 500 வீரர்களை உள்ளடக்கிய அணிகள் சுமார் 160 படகுகளில் நீரில் மிதந்து வர மேலே வானம் முழுவதும் வண்ண மயமாக்கப்பட்ட பின்னணியில் ஒலிம்பிக் விழா தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இறுதிநாள் நிறைவு வைபவம் ட்ரோகேடெரோ பகுதியில் நடத்தப்படும்.

2024 ஜூலை 26 முதல் ஒகஸ்ட் 11வரை நடைபெறவுள்ள பாரிஸ் ஒலிம்பிக் போட்டியின் மிகப் பெரிய விழாவாகிய ஆரம்ப வைபவத்தைப் பார்வையிட சுமார் ஆறு லட்சம் பேர் அனுமதிக்கப்பட வுள்ளனர். அரங்கின் உள்ளே ஆசனங்களில் அமர்ந்து பார்ப்பது போன்று இல் லாமல் நதிக் கரையோரங்களிலும் வெளியே சுமார் 80 பிரமாண்டமான திரைகளிலும் திறந்த வெளிக் காட்சி போன்று விழாவைக் கண்டு களிக்க ரசிகர்கள் அனுமதிக்கப்படவுள்ளனர். ஆனால் பாதுகாப்பு மற்றும் ஒழுங்குகள் தொடர்பான கவலைகள் இருப்பதால் அதற்கானபாரிய திட்டங்களை விவாதிப்பதற்கானகூட்டங்கள் இப்போதிருந்தே நடத்தப்படவுள்ளன.

பெரும் நிதிச் செலவில் ஸ்ரேடியங்களை அமைப்பதை விடவும் இருக்கின்ற இடங்களைக் கலையழகு மிக்கவையாக மெரு கூட்டிப் பொது வெளியில் விழாவை நடத்துவது ஒரு வரலாற்றுப் பெருமை என்று ஒலிம்பிக் ஏற்பாடுகளுக்குப் பொறுப்பான அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.பாரிஸ் நகரத்தின் வரலாற்று முக்கியத்துவம்மிக்க நொர்த் டாம் மாதா ஆலயம் அருங்காட்சியகம் வரை சகல மையங்களும் விழா அலங்காரப்பகுதிகளாக மாறவுள்ளன. வைரஸ் தொற்று நோய், பாதுகாப்பு அச்சுறுத்தல் என்றுபல சவால்கள் காத்திருக்கின்ற போதிலும் உலகெங்கும் இருந்தும் உள்நாட்டிலிருந்தும் வந்து திரளவுள்ள லட்சோபலட்சம் ரசிகர்களுக்கு மிக நெருக்கமாகவும், அவர்கள் வாழ்நாளில் காணக்கிடைத் திராத இந்திர ஜாலமாகவும் விழாவை நடத்துவதே தங்கள் நோக்கம் என்று ஏற்பாட்டுக் குழுவினர் பெருமைப்படு கின்றனர்.

உலகப் பெரும் தொற்று நோய்2024 ஆம் ஆண்டின் தொடக்கத்திலேயே ஓர் உள்ளூர் நோயாக மாறித் தணியும் என்று பைசர் தடுப்பூசி நிறுவனத்தின் உலகளாவிய தலைவர்நாளெட் கோசெரோ தெரிவித்திருக்கிறார். இதன் அர்த்தம்கோவிட்-19 வைரஸ் முற்று முழுதாக உலகத்தை விட்டு விலகிவிடும் என்பதல்ல. அது தடுப்பூசிக்குக் கட்டுப்பட்ட ஏனைய வைரஸ் தொற்று நோய்களைப் போன்று உலகில் ஆங்காங்கே நீடிக்கும்.ஆனால் ஆபத்தை உண்டுபண்ணாது.இவ்வாறு உலகம் தொற்று நோயின் முடிவுக்காக 2024 ஐ எதிர்பார்த்துக் காத்திருக்க அதே ஆண்டில் ஒலிம்பிக் திருவிழாக் காணக் காத்திருக்கின்றது பாரிஸ் நகரம்.இந்தக் கட்டத்தில் விழாவின் மாதிரிக் காட்சிகள் வெளியாகிஇருப்பது விளையாட்டு உலகில் பெரும் உற்சாக ஊற்றைத் திறந்து விட்டிருக்கிறது.



## இந்திய அணியின் உப தலைவராக கே.எல்.ராகுல்

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் பங்கேற்கவுள்ள இந்திய அணியின் உபதலைவராக கே.எல். ராகுல் பெயரிடப்பட்டுள்ளார்.

இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணியின் உபதலைவர் ரோஹித் சர்மாவுக்கு ஏற்பட்ட உபாதை காரணமாக அவரது இடத்துக்கு கே.எல்.ராகுல் பெயரிப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்காவுக்கான சுற்றுப் பயணத்திற்கு முன்னர் இடம்பெற்ற பயிற்சி நடவடிக்கைகளின் போது ரோஹித் சர்மாவுக்கு உபாதை ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையில் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடர் இடம்பெறவுள்ளதோடு முதலாவது போட்டி எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

## ஒரு தங்கம், 5 வெண்கலத்துடன் நாடு திரும்பிய இலங்கை பளுதூக்கும் அணி!

பொதுநலவாய பளு தூக்குதல் போட்டியில் ஒரு தங்கம் மற்றும் ஐந்து வெண்கலப் பதக்கங்களை வென்ற இலங்கை அணியினர் நேற்று காலை நாட்டை வந்தடைந்தனர்.

உஸ்பெகிஸ்தானின் தாஷ்கண்டில் நடைபெற்ற போட்டியில் இரண்டு ஆண்கள் மற்றும் இரண்டு பெண்கள் அணிகள் இலங்கையைப் பிரதிநிதித்துவப் படுத்தின. 20 பளுதூக்கும் வீரர்கள் இதில் பங்கேற்றிருந்தனர்.

பத்து நாட்கள் நடைபெற்ற போட்டி கடந்த வெள்ளிக்கிழமை நிறைவடைந்தது.

பெண்களுக்கான பளு தூக்குதல் வீராங்கனை ஸ்ரீமாலி சமரக் கோன் 45 கிலோவுக்கு கீழ் எடைப் பிரிவில் தங்கப் பதக்கத்தை வென்றார்.

இந்திக திஸாநாயக்க 73 கிலோ எடைப் பிரிவில் வெண்கலப் பதக்கத்தை வென்றார்.

மனோஜ் விஜேசிங்க 67 கிலோ எடைப் பிரிவில் வெண்கலப் பதக்கத்தையும், திலங்க பலகசிங்க 61 கிலோ எடைப் பிரிவில் வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

சீனாதன விதானங்கே மற்றும் நடிஷானி ராஜபக்ஷ ஆகியோரும் வெண்கல பதக்கங்களை பெற்றுக் கொண்டனர்.

பளுதூக்கும் வீரர்கள் குழு டுபாயில் இருந்து எமிரேட்ஸ் விமானம் மூலம் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இலங்கை பளுதூக்கும் சம்மேளனத்தின் தலைவர் மற்றும் முப்படை பளு தூக்கும் கழக அதிகாரிகள், விமான நிலையத்தில் வரவேற்றனர்.





## சென்னை கனவில் அஷ்வின்!

ஐ.பி.எல்., தொடரில் மீண்டும் சென்னை அணிக்கு திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளார் அஷ்வின்.

இந்திய அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் அஷ்வின் 34. தமிழகத்தை சேர்ந்த இவர், ஐ.பி.எல்., தொடரில் சென்னை அணிக்காக (2008 - 2015) கலக்கினார். 2010, 2011 இல் கிண்ணம் வென்ற சென்னை அணியில் இடம் பெற்றிருந்தார். சென்னை அணி 2 ஆண்டுகள் தடை செய்யப்பட்ட போது, புனே அணியில் விளையாடினார்.

2018 இல் மீண்டும் சென்னை அணிக்கு திரும்புவார் என நம்பப்பட்டது. மாறாக பஞ்சாப் (2018 - 2019), டில்லி அணிகளில் (2020 - 2021) இடம் பெற்றார். இம்முறை 10 அணிகள் பங்கேற்க உள்ள நிலையில், டில்லி அணி அஷ்வினை தக்கவைக்கவில்லை. அடுத்த மாதம் நடக்கவுள்ள வீரர்கள் ஏலம் குறித்து அஷ்வின் கூறியது:

சென்னை அணி என் இதயத்துக்கு நெருக்கமானது. என்னைப் பொறுத்தவரையில் இது ஒரு பள்ளி போன்றது. மீண்டும் சென்னை அணிக்கு திரும்பினால் நன்றாக இருக்கும். ஆனால் ஏலத்தை பொறுத்து தான் இவை முடிவாகும்.

10 அணிகள், 10 விதமான திட்டங்களுடன் களமிறங்கும். ஒவ்வொருவரும் வெவ்வேறு விதமாக சிந்திப்பர். எந்த அணிக்கு யார் பொருத்தமாக இருப்பர் என நமக்குத் தெரியாது. இதனால் ஏலத்தில் என்ன நடக்கும் என பொறுத்திருந்து காணலாம்.

ஆனால் ஒரு வீரராக எங்கு சென்றாலும் சரி, எந்த அணி நமது திறமைகளை நம்பி அதிக பணம் கொடுத்து வாங்குகின்றதோ, அவர்களுக்காக ஒட்டுமொத்த திறமையையும் வெளிப்படுத்தி வெற்றிக்கு போராடுவேன். அவர்களை கைவிட்டு விடமாட்டேன் - இவ்வாறு கூறினார்.

# 13 இற்கு அப்பால் தீர்வு வர 13 ஐத் தாண்ட வேண்டும்!

## மனோ எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு. டிசெ. 20

“தமிழ் - முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களது கூட்டு செயற்பாடு என்பது, இலங்கை, இந்திய, உலக அரசுகளுக்கு இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் தொடர்பான சட்ட பூர்வமான கடப்பாடுகளை ஞாபகப்படுத்துவதுதான். தமிழ் - முஸ்லிம் கட்சித் தலைவர் ஒன்றுகூடலின் அடிப்படை “தமிழ் பேசும் மக்களின் குறைந்தபட்ச கோரிக்கை யோசனைகள்” என்பதாகும். இந்த “குறைந்தபட்சம்” என்பதன் அர்த்தம் 13 என்பது இறுதித் தீர்வு அல்ல என்பதாகும். 13 இற்கு அப்பால் தீர்வுகள் வர 13 ஐத் தாண்ட வேண்டும்.”

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

கட்சியின் பொதுச் செயலாளர் குருசாமி தலைமையில் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் (மனோவின் பிறந்தநாள் அன்று) கொழும்பு பிரைடன் விடுதியில் நடத்திய கட்சி ஒன்றுகூடலில் கலந்துகொண்டு இவ்வாறு கூறிய மனோ எம்.பி. மேலும் தெரிவித்ததாவது:-

“இந்த பிறந்த நாளில், இதற்கு முன் நான் கடந்து வந்த பிறந்த நாட்களில் தோன்றாத ஒரு விருப்பம் எனக்குள் தோன்றுகிறது. அடுத்த பிறவியில் நான் ஒரு இலங்கையிலே ஒரு சிங்களவராக பிறக்க வேண்டும். தென் மாகாணத்தில், சிங்களம் மட்டுமே பேசும் ஒரு கடும் சிங்கள குக்கிராமத்து குடும்பத்தில் பிறக்க வேண்டும் என விரும்புகின்றேன். இதற்கான காரணங்களை நான் பகிரங்கமாகக் கூற விருபவில்லை.

ஆனால், இதன் அர்த்தம் எனக்கு தமிழ் மீது வெறுப்பு என்பதல்ல. என் தாய் தமிழ் மீது எனக்கு தீராத பற்று இருக்கிறது. நான், மாணவ பருவத்தில் இருந்து தமிழ் மொழியில் கையெழுத்திடும் தமிழன். தமிழ் திமிர் கொண்ட எனக்கு ஒரு போதும் உடல் களைப்பு ஏற்படுவதில்லை. ஒவ்வொரு பிறந்த நாளின் போதும் எனக்கு வயது குறைவதாகவே, எனக்குள் இளமை ஊஞ்சலாடுவதாகவே உணர்கிறேன்.

ஆனால், சமீப காலமாக, என் மனதில் ஒருவிதமான சலிப்பு ஏற்படுகிறது. வடக்கிலும், கிழக்கிலும், மலைநாட்டிலும் செயற்படும் தமிழ் அரசியல்வாதிகளை இட்டு, தமிழ் அரசியல் பரப்பை இட்டு, எனக்கு சலிப்பு ஏற்படுகிறது. நீண்ட நாள் இந்த பரப்பில் இருக்க என் மனம் விரும்ப மறுக்கின்றது.

இன்று என் பிறந்த நாள். என் தாய் டயனா தவமணி கணேசனும், தந்தை வைத்தியலிங்கம் பழனிசாமி கணேசனும் உயிரோடு இருந்திருந்தால், நான் இன்று செய்யும் காரியங்களைக் கண்டு மகிழ்வார்கள். என் நண்பன் நடராஜா ரவிராஜ் உயிருடன் இருந்திருந்தாலும், இன்றைய எம் நகர்வுகளில் பங்காளியாக இருந்தே இருப்பான். ஆனால், இவர்கள் இல்லையே.

என்றாலும் இவர்களை ஈடு செய்ய எனது உடன்பிறவா நண்பர்கள், இரத்தத்தின் இரத்தங்கள், நீங்கள் நேற்றிலிருந்து, நாடு முழுக்க, உலகம் முழுக்க இருந்து வாழ்த்து கூறுகிறீர்கள். நேரில் வந்து சந்திக்கிறீர்கள். உங்கள் அன்பால் பூரித்து போய் விட்டேன். அனைவருக்கும் நன்றி.

யார் என்ன சொன்னாலும், தமிழ் அரசியல் பரப்பில், இன்றைய பிரதான பேசுபொருள், தமிழ் - முஸ்லிம் கட்சி தலைவர்களது கூட்டுச் செயற்பாடுதான். நண்பர்கள் செல்வம், சித்தார்தன் ஆகியோரது கூட்டு முன்முயற்சியால் ஆரம்பமாகி இருக்கும் தமிழ் - முஸ்லிம் கட்சி தலைவர்களின் கலந்துரையாடல் பற்றி இன்று தமிழ் பேசும் ஊரெங்கும் பேச்சு.

சிலர் திட்டித் தீர்த்து தம் மன விகாரங்களைக் காட்டுகிறார்கள். இவர்களுக்கு எல்லாம் பெரும் பதில்களைக் கூறி, அவர்களை “காதலிக்க எனக்கு நேரமில்லை”. மிகப்பலர், இது நல்ல “காலோசித காரியம்” என பாராட்டுகின்றார்கள். அவர்களுக்கு நன்றி. பல கட்சிகள் தங்களையும், இதில் இணைத்துக் கொள்ள சொல்கிறார்கள். எமது அடிப்படைகளை ஏற்பவர்கள் அனைவரும் படிப்படியாக உள்வாங்கப்படுவார்கள் என நம்புகிறேன்.

நான் இது பற்றி சில விடயங்களை, உங்களுக்குச் சொல்ல விரும்புகின்றேன்.

முதலாவது, தமிழ்க் கட்சிகள் இப்படி பலமுறை கூடி, வடை சாப்பிட்டு, தேநீர் அருந்தி களைகின்றார்கள் என எவரும் சலித்துக் கொள்ளதீர்கள். அது முறையல்ல. உண்மையில் சமகாலத்தில் இத்தனை எண்ணிக்கையில் தமிழ் கட்சிகள் கூடி பேசுவது இதுவே முதல் தடவை. இதை நான் நீண்ட காலமாக சொலி வந்தேன். யாரும் கேட்கவில்லை. இப்போது நண்பர்கள் செல்வமும், சித்தார்தனும் கேட்டு வந்தார்கள். நானும் இணைந்துக்கொண்டேன்.

இன்னொரு விசேடம், இதில் ஈழத்தமிழ், மலையக தமிழ், முஸ்லிம் என தமிழ் பேசும் மூன்று தரப்பு கட்சி தலைவர்களும் ஒன்று சேர்ந்துள்ளார்கள். இதைக் கவனிக்கத் தவற வேண்டாம்.

அடுத்தது, போர் நிறுத்த காலகட்டத்தில், வடக்கும், கிழக்கு வாழ் தமிழரின் அன்றைய தலைமை பாத்திரத்தை வகித்த புலிகள், தமிழ்த் தேசியப் பரப்புக்கு வெளியே நான்கு கட்சித் தலைவர்களை அங்கீகரித்து, அழைத்து, உபசரித்துப் பேசினார்கள். அவர்கள் பெரியசாமி சந்திரசேகரன், ஆறுமுகன் தொண்டைமான், மனோ கணேசன், ரவூப் ஹக்கீம் ஆகியோர்தான். இதில் முதலிருவர் இன்று உயிருடன் இல்லை. அதையிட்டு நான் வருந்துகின்றேன். ஆனால், அதுதான் யாதார்த்தம்.

ஆனால், அன்றே அங்கீக்கப்பட்டு, இன்றும் சாகாமல் இருக்கும், கட்சித் தலைவர்கள்தான், உங்கள் முன் இப்போது பேசிக்கொண்டு இருக்கும் மனோ கணேசன் மற்றும் ரவூப் ஹக்கீம் ஆகியோர் ஆகும். இவர்களைதான் இன்று நண்பர்கள் செல்வமும், சித்தார்த்தனும் அழைத்து, வரலாற்றை மீள எழுதுகின்றார்கள். அவ்வளவுதான்

இன்று, “துரோகி”, “எதிரி”, “ஜனநாயகவாதி”, “ஆயுதவாதி” என்ற பட்டங்களை எல்லாம் கொஞ்ச காலம் இடைநிறுத்தி வைக்க வேண்டும். ஒன்றுபட்டு நின்று ஒரே குரலில் பேச வேண்டிய காலம் இதுவாகும். அதை விடுத்தது, பழைய வரலாற்றை அலசி குற்றம் பார்த்துக் கொண்டு இருந்தால் சுற்றம் இல்லவே இல்லை.

பாருங்கள், சிங்கள கட்சிகள் மத்தியில் எவ்வளவோ குடுமி பிடி சண்டைகள். ஆனால், தமிழரை, அதாவது ஈழத்தமிழரை, மலையக தமிழரை, தமிழ் பேசும் இஸ்லாமிய மக்களை ஒடுக்குவது என்றால், எல்லோரும் ஏறக்குறைய ஒரே நிலைப்பாட்டில் இருக்கிறார்கள். அவர்களை பார்த்தாவது நாம் பாடம் படிக்க கூடாதா?

“மனோ அண்ணையும், இந்த 13க்குள் தமிழரை இறுக்கும், சதியில் சிக்கி விட்டார்” என்று தான் வேதனைப்படுவதாக தம்பி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நாகரீகமாக கூறி இருக்கும் ஒரு காணொளியை நான் கண்டேன். அதே போல், மக்களால் தெரிவு செய்யப்பட்ட பெருந்தொகை எம்.பிக்களை நாடாளுமன்றத்தில் கொண்டுள்ள கட்சிகளின் தலைவர்களை, “அந்தக் கட்சி, இந்தக் கட்சி, வந்த கட்சித் தலைவர்கள்” எனத் தம்பி எம்.ஏ. சுமந்திரன், எடுத்தெறிந்து பேசிய காணொளியையும் கண்டு வேதனையடைந்தேன்.

இவர்களுக்கு “அண்ணன்” என்ற முறையில் நான் காரசாரமாக பதில் கூறப் போவதில்லை. எவருக்கும் கடன் கொடுக்கும் அளவுக்கே இன்று, எனக்கு நிதானமும், முதிர்ச்சியும் நிறைய இருக்கின்றது. அவர்களது பேச்சுரிமையை நான் மதிக்கிறேன்.

ஒன்றை மட்டும் கூற விளைகிறேன். இந்தக் கட்சித் தலைவர் ஒன்றுகூடலின் அடிப்படை “தமிழ் பேசும் மக்களின் குறைந்தபட்ச கோரிக்கை யோசனைகள்” என்பதாகும். இந்த “குறைந்தபட்சம்” என்பதன் அர்த்தம் 13 என்பது இறுதி தீர்வு அல்ல, என்பதாகும். 13க்கு அப்பால் தீர்வுகள் வர 13 தாண்ட வேண்டும். இந்த ஜனாதிபதி, பிரதமர் சட்டத்தரணி தம்பிகள், இதை புரிந்துக் கொண்டு தமது கட்சி மட்டங்களில் இருந்தபடி எம்முடன் ஒத்துழைக்க வேண்டுகிறேன்.



13 பிளஸ் என்பது மஹிந்தவின் உலக மகா பொய். இறுதிப் போருக்கு முழு உலகின் ஆதரவை பெற அவர் சொன்ன அண்டப்பொய் அதுவாகும். அவர் ஒரு பொய்யர். இன்று மஹிந்த ராஜபக்ச எமக்கு 13க்கு அப்பால் தீர்வு தரத் தயாராக இருப்பதாகவும், அதை எமது தமிழ் - முஸ்லிம் கட்சி தலைவர்களது கூட்டு செயற்பாடு தடுப்பதாகவும் கூறுவது, அபத்தம்.

உண்மையில் மஹிந்தவின் ஜனாதிபதி சகோதரர், புதிய அரசமைப்பு ஒன்றை தயாரிக்க இரகசியமாக திட்டமிடுகிறார். அதில் 13ஐ முழுக்க அகற்ற பார்க்கிறார்கள். ஆகவே மஹிந்த ராஜபக்ச தர விரும்புவது 13 பிளஸ் அல்ல. அது 13 மைனஸ்.

உண்மையில், 13ஆம் திருத்தம், மாகாண சபைகள் சட்டம், இவை எல்லாம், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் குழந்தைகள். இதில் தமிழ்த் தரப்பு கையெழுத்திடவில்லை. இந்தியாவுக்கு அன்று முதல் இந்த நோய் இருக்கின்றது. 1964ஆம் ஆண்டு இந்திய அரசு, இலங்கை அரசுடன் கையெழுத்திட்ட, ஸ்ரீமாவோ - சாஸ்திரி ஒப்பந்தத்திலும் மலையகத் தமிழர் பிரதிநிதிகள் தொடர்புபடவில்லை. எம்மைக் கலந்து ஆலோசிக்காமலேயே எமது தலைவிதியை இவர்கள் தீர்மானித்தார்கள்.

ஸ்ரீமாவோ - சாஸ்திரி ஒப்பந்தம் இந்த நாட்டில் மலையகத் தமிழரை அரசியல் ரீதியாகப் பலவீனமடையச் செய்துள்ளது. அந்த பலவந்த நாடு கடத்தல், நடக்காமல் இருந்திருந்தால், இன்று தென்னிலங்கையில் மாத்திரம் 30 தமிழ் எம்பீக்கள் இருந்திருப்போம். அதில் பெரும் தொகை தமிழ் முற்போக்கு கூட்டணி எம்.பிக்களாக நான் மாற்றி இருப்பேன்.

அதேபோல், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின்போது, புலிகளை தவிர்த்து, இதே ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈ.பி.டி.பி. ஆகிய போராளிகள் இந்திய, இலங்கை அரசுகளை நம்பி ஆயுதங்களை கையளித்து, தேர்தல் அரசியலுக்குள்ளே வந்தார்கள்.

அதேபோல், இறுதிப் போரின்போது, முழு உலகமே இலங்கை அரசுக்கு துணை வந்தார்கள். இதன்மூலம் உலகம் எமக்கு தந்த செய்தி என்ன? போரின் பின்னர் தமிழருக்கு நியாயமான அரசியல் தீர்வு வழங்கப்படும் என்பதாகும். ஆனால், இன்று யுத்தம் முடிந்து 12 ஆண்டுகள் ஆகியும் ஒரு அங்குலம்கூட முன்நோக்கிய நகர்வில்லை.

அதேபோல், 1964ஆம் ஆண்டின் ஸ்ரீமாவோ - சாஸ்திரி ஒப்பந்தத்தின் அர்த்தம், இலங்கை குடியுரிமை பெறும் மலையக தமிழருக்கு, ஏனைய இலங்கை பிரஜைகளுக்கு இருக்கும் அதே உரிமைகள் உறுதி செய்யப்பட வேண்டும் என்பதாகும். இதுவே அந்த ஒப்பந்தத்தின் உள்ளார்த்தம் ஆகும். ஆனால், 57 ஆண்டுகள் ஆகியும் மலையக தமிழருக்கு, இந்நாட்டில் முழுமையான காணி உரிமை, கல்வி உரிமை, அரசியல் உரிமை, வீட்டுரிமை ஆகியவை சமமாக கிடைப்பது இல்லை.

ஆகவே, தமிழ் - முஸ்லிம் கட்சி தலைவர்களது கூட்டுச் செயற்பாடு என்பது, இலங்கை, இந்திய, உலக அரசுகளுக்கு இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் தொடர்பான சட்ட பூர்வமான கடப்பாடுகளை ஞாபகப்படுத்துவதுதான். இனியும் தாமதம் வேண்டாம். இனியும் எம்மால் பொறுக்க முடியாது. எங்கள் வாழ்வுடன் இனியும் விளையாடாதீர்கள் என உரக்கக் கூறுகின்றோம். வாருங்கள், எல்லோரும் ஒரே குரலில் கூறுவோம்.

இல்லாவிட்டால் எனக்கு விடை கொடுங்கள். நான் மறைந்து, மீண்டும் பிறந்து வருவேன். தென் மாகாணத்தில், சிங்களம் மட்டுமே பேசும் ஒரு கடும் சிங்கள குக்கிராமத்து குடும்பத்தில் பிறந்து வருவேன். நன்றி” - என்றார். (இ)

## இலங்கை...

இது குறித்து ராமதாஸ் வெளியிட்ட அறிக்கையில், "இலங்கையில் தமிழர்கள் அதிகம் வாழும் யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இலங்கைக்கான சீனத் தூதர் கி சென்ஹாங் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கிறார். அங்கு வாழும் ஈழத் தமிழர்களுக்கும், தமிழர் அமைப்புகளுக்கும் அவர் ஏராளமான உதவிகளை வாரி வழங்கியிருக்கிறார். இலங்கைத் தமிழர்களை படுகொலை செய்ய உதவிய சீனா, ஈழத் தமிழர்களுக்கு உதவுவது இயல்பானது அல்ல.

இலங்கைக்கான சீனத் தூதராக நியமிக்கப்பட்டுள்ள கி சென்ஹாங், கடந்த புதன், வியாழன், வெள்ளி ஆகிய 3 நாட்களும் ஈழத்தமிழர்கள் அதிகம் வாழும் வடக்கு மாகாணத்தில் சுற்றுப்பயணம் செய்துள்ளார். யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு வேட்டி அணிந்து சென்ற சீனத் தூதர், அங்கு இந்து சமய முறைப்படி வழிபாடு நடத்தியதுடன், கோயிலுக்கு நன்கொடைகளையும் வழங்கியுள்ளார்.

கோயிலுக்கு வெளியில் தமிழர்களுக்கு பல்வேறு உதவிகளை வழங்கினார். தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் தீயால் அழிந்து சீரமைக்கப்பட்ட நூலகத்துக்கு சென்ற சீனத் தூதர், நூலகப் பயன்பாட்டுக்கு மடிகணினி உள்ளிட்ட உதவிகளை வழங்கியதுடன், நூலகத்தை டிஜிற்றல்மயமாக்கவும் சீனா உதவும் என்று அறிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர்களின் மீனவர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர்களாக இருக்கும் மீனவர்களுக்கு மீன்பிடி வலைகள், உணவு தானியங்கள் என ரூபா 75 லட்சத்துக்கும் கூடுதலான உதவிகளை சீனத் தூதர் சென்ஹாங் வழங்கியுள்ளார்.

இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான இன அழிப்புப் போருக்கு அனைத்து வகைகளிலும் உதவியது சீன அரசு தான். அப்படிப்பட்ட சீன அரசு இப்போது திடீரென ஈழத்தமிழர்கள் மீது பாசம் காட்டுவதன் பின்னணியில் திட்டமிடப்பட்ட கணக்குகள் உள்ளன. சீனாவையும், சிங்களத்தையும் எதிரியாகப் பார்க்கும் இலங்கைத் தமிழர்கள் மத்தியில் தனக்கு நற்பெயரை ஏற்படுத்திக் கொண்டு, இலங்கையின் வடக்குப் பகுதியிலும் கால் பதிக்க வேண்டும் அதன் மூலம் இந்தியாவுக்கு நெருக்கடி தரவேண்டும் என்பது தான் சீனாவின் நோக்கமாகும். அதன் ஒரு கட்டமாகத் தான் சீனத் தூதர் தமிழராகவே மாறி ஆலய வழிபாடு, மீனவர்களுக்கு உதவி உள்ளிட்ட உதவிகளை வழங்கி, நல்லெண்ணத்தை ஏற்படுத்துவதற்கான நாடகத்தை அரங்கேற்றியிருக்கிறார்.

சீனாவின் இந்த திடீர் கரிசனத்திற்கு, இந்திய மேற்கொண்ட ராஜதந்திர நடவடிக்கையால் சீனாவுக்கு ஏற்பட்ட பின்னடைவும் ஒரு காரணமாகும். தமிழகத்திற்கு அருகில் உள்ள நெடுந்தீவு, அனலைதீவு, நயினாதீவு ஆகிய 3 தீவுகளில் காற்றாலை மற்றும் சூரியஒளி மின்திட்டத்தை செயல்படுத்துவதற்கான ஒப்பந்தத்தை சீனாவின் சினோசர் அண்ட்-இடெக்வின் நிறுவனத்திற்கு கடந்த ஜனவரியில் இலங்கை வழங்கியது.

இத்திட்டங்களை செயல்படுத்தும் போர்வையில் தமிழ்நாட்டை சீனா கண்காணிக்கும் ஆபத்து உள்ளதாகவும் இந்தியா இந்த விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தி கடந்த பெப்ரவரி 9-ஆம் திகதி அறிக்கை வெளியிட்டிருந்தேன். அதன்பின்னர் அத்தீவுகளில் மின்திட்டத்தை செயல்படுத்துவதற்கான ரூபா 87 கோடியை இந்தியா இலங்கைக்கு இலவசமாகவே கொடுத்ததால், அத்திட்டத்திலிருந்து சீனாவை இலங்கை வெளியேற்றிவிட்டது. இந்தியாவின் அழுத்தம் தான் அதற்கான காரணம் என்று மறைமுகமாக குற்றம்சாட்டிய சீனா, இப்போது மாலத்தீவுகளில் கலப்பு மின்திட்டங்களை செயல்படுத்த ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

தமிழ்நாடு உள்ளிட்ட தென்னிந்தியாவை கண்காணிப்பதற்கான முதல் முயற்சி தோல்வியடைந்து விட்ட நிலையில், ஈழத்தமிழர்களின் ஆதரவு இல்லாமல் வடக்கு இலங்கையில் கால்பதிக்க முடியாது என்பதால் தான், இலங்கைத் தமிழர்களை வளைக்கும் முயற்சியை சீனா மேற்கொண்டிருக்கிறது. யாழ்ப்பாணத்தில் பயணம் மேற்கொண்ட சீனத் தூதர் சென்ஹாங், பருத்தித்துறைக்கு சென்று அங்குள்ள சிங்கள கடற்படையினரிடம் "இங்கிருந்து இந்தியா எவ்வளவு தூரம்?" என்று கேட்டறிந்ததும், அங்கிருந்து ட்ரோன்கள் மூலம் இந்திய எல்லையை கண்காணித்ததும், கடைசியாக தமிழக எல்லைக்கு அருகில் இராமர் பாலத்தின் மூன்றாவது மணற்திட்டு வரை படகில் பயணித்து பார்வையிட்டுச் சென்றுள்ளதும் பொழுதுபோக்குவதற்காக அல்ல; இந்தியாவை கண்காணிப்பதற்கான உத்திகளை வகுப்பதற்காகத் தான் என்பதை அனைவரும் அறிவார்கள்.

இலங்கைத் தமிழர்களை வளைத்து, வடக்கு இலங்கையில் கால் பதித்து விடலாம் அதன்பின் இந்தியாவுக்கு தொல்லை தரலாம் என்று சீனா நினைத்தால், அந்த முயற்சிக்கு இலங்கைத் தமிழர்கள் துணை போகமாட்டார்கள். இலங்கைக்கு ஆதரவாக ஈழத்தமிழர்களுக்கு எதிரான செயல்களை இந்தியா கடந்த காலங்களில் செய்துள்ளது என்றாலும் கூட, இந்தியாவின் பாதுகாப்புக்கும், இறையாண்மைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் எத்தகைய சதித் திட்டத்திற்கும் இலங்கைத் தமிழர்கள் துணை போகமாட்டார்கள். அதேநேரத்தில் சீனாவுக்கு வழங்கியிருந்த மின் திட்ட ஒப்பந்தத்தை இலங்கை திரும்பப் பெற்று விட்டது என்பதாலேயே இலங்கையை நம்ப முடியாது. நாளையே சீனா இன்னும் பல மடங்கு நிதி அளித்தால் இந்தியாவுக்கு துரோகம் செய்ய இலங்கை தயங்காது.

இலங்கையின் வடக்குப் பகுதியில் சீனா மேற்கொண்டு வரும் முயற்சிகள் எதிர்காலத்தில் இந்தியாவின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்பது மட்டும் மறுக்க முடியாத உண்மை. இதைக் கருத்தில் கொண்டு இந்தியா பாதுகாப்பு உத்திகளிலும், வெளியுறவுக் கொள்கையிலும் மாற்றங்களைச் செய்ய வேண்டும். கச்சதீவை மீட்டு இந்தியாவுக்கான கண்காணிப்பு மையமாக மாற்றிக் கொள்வதுடன், இலங்கைத் தமிழர்களை ஆதரித்து அவர்களை வடக்கு இலங்கையில் அதிகாரம் பெற்றவர்களாக மாற்ற வேண்டும்" என்று தெரிவித்துள்ளார். (அ)

## தோட்டக்...

இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த நியந்தன் ரித்திக்குமார் (வயது-08) என்ற சிறுவனே உயிரிழந்துள்ளார்.

பெற்றோர் வேலைக்குச் சென்றுள்ள நிலையில் சிறுவன் தோட்டக்காணியில் பட்டம் ஏற்றி விளையாடிவிட்டு சகோதரியுடன் இணைந்து தோட்டக்காணியில் உள்ள கிணற்றில் தூண்டில் போட்டு மீன் பிடித்தபோது, கிணற்றுக்குள் தவறி வீழ்ந்துள்ளான்.

சம்பவத்தை ஓடிச் சென்று உறவினர்களிடம் சகோதரி தெரிவித்ததை அடுத்து உறவினர்கள் சென்று கிணற்றில் தேடிய போது சிறுவன் சடலமாக மீட்கப்பட்டான் என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பருத்தித்துறை ஆதார மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ச. சிவராசா, சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்க உத்தரவிட்டார். (அ-2-3)

## டொலர் பற்றாக்...

கடந்த வாரம் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல்வேறு அமைச்சர்களினால் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவ்விடயம் தொடர்பில் வல்லுநர்களின் ஆலோசனைகளைப் பெறவும் முன்மொழியப்பட்டுள்ளதாக சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அதன்படி, கடந்த அமைச்சரவை கூட்டத்தில் இது குறித்து இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. (அ)

## சீனாவின்...

மாட்டோம் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

சீனத்தூதுவர் வடக்குக்கான பயணத்தை மேற்கொண்டிருந்த பின்னர் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார வடக்கில் சீனாவுக்கும், இந்தியாவுக்கும் காணிகளை வழங்கவுள்ளதாகக் கருத்து வெளியிட்டுள்ளார். இது தமிழ் மக்களின் இருப்பை கேள்விக்குறியாக்கியுள்ளதே என கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை வடமராட்சி கிழக்கு பகுதியில் 2004 ஆண்டு சுனாமியால் காவு கொள்ளப்பட்டவர்களின் நினைவாக '26ல் செங்கடலே' என்னும் இசைத்தட்டு வெளியீட்டு விழா உடுத்துறை பாரதி விளையாட்டு மைதானத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது. அதன் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

இலங்கை அரசாங்கம் தற்போது புதிய இராஜ தந்திரத்தை கையாள்கின்றது. அத்துடன் இந்தியாவை வெருட்டி கையாள்வதற்கு சீனா என்ன யுக்திகளை கையாள வேண்டுமோ அதற்காக ஈழத்தமிழர்களின் உரிமைகளை நசுக்குவதற்கு சீனாவை ஒரு கருவியாக இலங்கை பயன்படுத்தி தான் வடக்கையும் கிழக்கையும் பெரிய அளவில் பயன்படுத்தி இருக்கின்றது.

அதிலும் இலங்கைக்கு பல தூதுவர்கள் வருகிறார்கள், போகிறார்கள். ஆனால் சீன தூதுவர் வந்தால் சக்கோட்டையில் இருந்து இந்தியா எவ்வளவு தூரம் என்று கேட்பதும் அவர் மன்னாரிலே மணல் திட்டுக்களைச் சென்று பார்ப்பதும் ஒரு மிக ஆபத்தானது.

தமிழர்களின் இருப்பை கேள்விக்கு உட்படுத்துகின்ற ஒரு விடயத்தை சீனத் தூதுவர் கடந்த இரண்டு நாட்களாக செய்து இருக்கிறார்.

இதனை அமைச்சர் வாசுதேவ நாணயக்கர, நாங்கள் இந்தியாவுக்கும் நிலம் வழங்குவோம் சீனாவுக்கும் நிலம் வழங்குவோம் என்றால் எங்கள் நிலங்களை நீங்கள் யார் யாருக்கு வழங்கப்போகிறீர்கள்?

நாங்களே இந்த மண்ணில் போராடி வாழ முடியாமல் இருக்கிற எங்கள் நிலங்களை நீங்கள் பல திணைக்களத்தின் ஊடாகவும் இராணுவம், கடற்படை, பொலீஸ், விமானப்படை ஊடாகவும் பறித்துக் கொண்டு இருக்கிற அதே நேரம் தொழில் முயற்சி என்ற போர்வையில் தமிழர்களின் சுயாதீனமான சுயநிர்ணய உரிமையை பறிக்கும் வேலையை அரசு பல இடங்களில் கையாள்கிறது.

அதற்கு பல சோசலிசயம் பேசிய-சமதர்மம் பேசிய வாசுதேவ நாணயக்கார போன்றவர்களை பயன்படுத்தி அவர்களுக்கு ஊடாகவும் இந்த கருத்தை கொண்டு வந்து இருக்கிறது. ஆகவே சோசலிசம் பேசியவர்கள் சீன கொம்யூனிசியம் பேசுகிறார்களா? அல்லது அவர்கள் எந்த வகையில் தமிழர்களை அடக்குவதற்கு முயற்சிக்கிறார்கள் என்பதை நாங்கள் அவதானிக்கின்றோம்.

சீனாவின் நடவடிக்கைகளை நாங்கள் ஒரு துளியளவும் ஏற்கமாட்டோம். நாங்கள் இலங்கைக்கு மட்டுமல்ல சீனாவிற்கும் எதிராகவும் நாங்கள் போராட வேண்டி நாட்கள் அண்மையில் வந்துள்ளதாகவே நாங்கள் உணருகின்றோம். ஆகவே அதற்கான நட வடிக்கையையும் நாங்கள் தொடர்ச்சியாக மேற்கொள்வோம் - என்றார். (அ-02)

## கிளிநொச்சியில்...

மாக மீட்கப்பட்டார்.

விளையாடிக்கொண்டிருந்த சிறுமி காணாமற்போன நிலையில் தேடப்பட்டார்.

சிறுமியை உறவினர்கள் மற்றும் அயலவர் இணைந்து தேடினார்கள். வீட்டுக் கிணற்றை நீர்ப்பம்பி மூலம் இறைத்துள்ளனர்.

இதன்போது சிறுமி கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த சிறுமியின் உடல் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (அ)

## சீனா மட்டுமல்ல...

'போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் அரசியல் தீர்வு குறித்து முன்னேற்றகரமான கருத்துக்களையே எதிர்பார்க்கின்றனர். ஆனால், சீனா இது தொடர்பில் இதுவரை அக்கறை செலுத்தவில்லை' என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்திருந்தார். இலங்கைக்கான சீனத் தூதுவர் ட்சீ சென்ஹோங் தலைமையிலான குழுவினர் வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கு கடந்த சில தினங்களாகப் பயணம் மேற்கொண்டிருந்தனர். இந்தப் பயணம் தொடர்பில் சம்பந்தன் கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு கூறியிருந்தார்.

சம்பந்தனின் இந்தக் கருத்து தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸிடம் வினவியபோது,

"இலங்கை இறையாண்மையுள்ள நாடு. இறையாண்மையுள்ள நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடும் அதிகாரம் வெளிநாடுகளுக்கு இல்லை. அந்த வகையில், இந்தியா, பிரிட்டன், அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாடுகள் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு வழங்கும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கனவு காணக்கூடாது. சீனா மாத்திரமல்ல எந்த நாடும் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்காது. எமது அரசு தீர்வை வழங்கத் தயாராகவுள்ளது. ஆனால், அதைப் புறக்கணிக்கும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் நடவடிக்கைகள் உள்ளன" - என்றார். (இ)

## பூப்பந்தாட்ட...

இளைஞரொருவர் யானை தாக்கி உயிரிழந்துள்ளார் என கெப்பிற்றிக்கொல்லாவ பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று மாலை இடம் பெற்றது.

இவ்வாறு உயிரிழந்தவர் திருகோணமலை பகுதியைச் சேர்ந்த சிவபாலசுந்தரம் மயூரன் (33வயது) ஆவார்.

69ஆவது தேசிய பூப்பந்தாட்ட விளையாட்டு நிகழ்வு கொழும்பில் நடைபெற்று வருகின்ற நிலையில் இவர் அதன் நடுவராக செயற்பட்டு வந்துள்ளார்.

கொழும்பில் இருந்து வவுனியா நோக்கி ரயிலில் வருகை தந்த அவர் மீண்டும் மோட்டார் சைக்கிளில் திருகோணமலை நோக்கி சென்றுகொண்டிருந்த போது வீதியை கடக்க முற்பட்ட யானை இவரை தாக்கியதாகவும் தெரியவருகின்றது.

விசாரணைகளை கெப்பிற்றிகொல்லாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## சீனத் தூதுவரின்...

விஜயத்தைக் கண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஏன் அஞ்சுகின்றனர் என்று எமக்குப் புரியவில்லை."

- இவ்வாறு சபை முதல்வரும் கல்வி அமைச்சருமான தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

இலங்கைக்கான சீனத் தூதுவர் ட்சீ சென்ஹோங் தலைமையிலான குழுவினர் வடக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்தமை குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், அதன் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் அதிருப்தியான கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் கருத்துரைக்கும் போதே அமைச்சர் தினேஷ் குணவர்தன மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"வடக்கு மாகாண தமிழ் மக்கள் அபிவிருத்தியை விரும்புகின்றனர். ஆனால், இதைத் தடுக்கும் நடவடிக்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஈடுபடுகின்றனர். போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அபிவிருத்திதான் முக்கியம்" - என்றார்.

ஈழநாடு
Eelanadu

# தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விவகாரத்தில் சீனா ஏன் மௌனம்?

## சம்பந்தன் கேள்விக்கணை



கொழும்பு, டிசெ. 20

**"போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட எமது மக்கள் அரசியல் தீர்வு குறித்து முன்னேற்றகரமான கருத்துக்களையே எதிர்பார்க்கின்றனர். ஆனால், சீனா இது தொடர்பில் இதுவரை அக்கறை செலுத்தவில்லை."**

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

இலங்கைக்கான சீனத் தூதுவர் ட்சீ சென்ஹோங் தலைமையிலான குழுவினர் வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கு கடந்த சில தினங்களாக பயணம் மேற்கொண்டிருந்தனர். இந்தப் பயணம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இலங்கைக்கான எந்தவொரு தூதுவரும் நாட்டின் எந்தவொரு பிரதேசத்தையும் பார்வையிட முடியும். அதற்கான உரிமை அவருக்கு உள்ளது. ஆனால், எம்மையும் எமது மக்களையும் பொறுத்தவரையில் சீனத் தூதுவரின் பயணம் முக்கியமானதல்ல.

எம்மைப் பொறுத்தவரையில் சீன நாட்டவரின் அடிப்படைக் கொள்கைகள் என்னவாக உள்ளன என்பதே எமது கேள்வியாகும்.

இலங்கையில் அரசியல் பிரச்னைகள் பலமடைந்துள்ளன. சீனாவோ அல்லது சீனாவின் தூதுவரோ இனப்பிரச்சினை குறித்து அரசியல் தலைமைகளைச் சந்தித்து அதற்கான தீர்வுகளை முன்வைக்கவில்லை.

இலங்கையில் வாழ்கின்ற தமிழ் மக்களும் சமத்துவத்தின் அடிப்படையிலும், நீதியின் அடிப்படையிலும், நியாயத்தின் அடிப்படையில் வாழ வேண்டும் என்பது குறித்து சீனத் தரப்பினர் எதனையும் கூறவில்லை. வடக்கு மாகாணத்துக்கு பயணம் செய்த சீனத் தூதுவரும் அங்கும் அவ்வாறான கருத்துக்களைக் கூறவில்லை.

போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட எமது மக்கள் அரசியல் தீர்வு குறித்து முன்னேற்றகரமான கருத்துக்களையே எதிர்பார்க்கின்றனர்.

சீனத் தூதுவரின் வடக்குக்கான வருகையை நாம் எதிர்க்கவில்லை. அதேவேளை, இந்தப் பயணம் குறிப்பிட்ட ஒரு சில நோக்கங்களுக்காக மட்டுமே அமைந்துள்ளது எனக் கருதுகின்றோம்.

இனப்பிரச்சினை விடயத்தில் சீனாவின் நிலைப்பாடு என்னவிதமாக உள்ளது என்பதே எமக்கு முக்கியம். இந்த விடயத்தில் மக்கள் சிந்தித்து முடிவெடுப்பார்கள் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை" - என்றார். (இ)



## காணிப் பிணக்கு பற்றி விசேட கலந்துரையாடல்

முல்லைத்தீவு, டிசெ. 20

முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் காணிப்பிணக்குகள் தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றது.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் காணிப்பிணக்குகள் காணப்படும் மக்களின் பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இதன்போது வேணாவில் பகுதியில் கடந்த காலத்தில் காணி வேண்டி போராட்டம் மேற்கொண்ட 20 குடும்பங்களுக்குக் காணியும் வீட்டுத்திட்டமும் வழங்கும் நடவடிக்கை பிரதேச செயலகத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது எனக் கிராம மக்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்டது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் எஸ்.ஜெயகாந்த் மற்றும் காணிப்பகுதி உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலர் இதில் கலந்துகொண்டனர். (இ)



## 217ஆவது தர்ம உபதேசம்

நுவரெலியா, டிசெ. 20

பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் எண்ணக்கருவுக்கு அமைய அனைத்து பௌர்ணமி தினங்களிலும் நடத்தப்படும் 'அமாதம் சிசிலச' தர்ம உபதேசத் தொடரின் 217ஆவது தர்ம உபதேசம் நேற்றுமுன்தினம் நுவரெலியாவிலுள்ள பிரதமர் இல்லத்தில் நடைபெற்றது.

பிரதமரின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ புத்தபெருமானுக்கு மலர் பூஜை நிகழ்த்தியதை தொடர்ந்து, தர்ம உபதேசம் நிகழ்த்துவதற்காக வருகை தந்த வரலாற்று சிறப்புமிக்க வாரியபொல, கொலம்பகம ஸ்ரீ மியுகுணாராம ரஜமஹா விகாராதிகாரி வணக்கத்துக்குரிய கலாநிதி வாரியபொல, கொலம்பகம ஸ்ரீ மியுகுணாராம ரஜமஹா விகாராதிகாரி வணக்கத்துக்குரிய கலாநிதி கல்லேஹெபிடியே பேமரதன தேரர் ஆகியோரை வரவேற்றார். (இ)

## காஸ் அடுப்பு வெடித்ததில் சமையலறையில் பாரிய தீ



வவுனியா, டிச. 20

வவுனியா, நெடுங்கேணி பகுதியில் காஸ் அடுப்பு வெடித்து சமையலறையில் தீப்பிடித்து எரிந்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, நெடுங்கேணி, சேனைப்புலவு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட மாமடு கிராமத்தில் உள்ள வீடு ஒன்றின் சமையலறையில் இருந்த காஸ் அடுப்பு நேற்றுமுன்தினம் திடீரென வெடித்து தீப் பற்றி எரிந்துள்ளது.

இதனை அவதானித்த வீட்டார் உடனடியாக காஸ் சிலிண்டரை அடுப்பில் இருந்து அகற்றி வீட்டுக்கு வெளியே கொண்டு சென்றதுடன், நீரினை விசிறி தீயிணைக் கட்டுப்பாட்டுகுள் கொண்டு வந்தனர். இதனால் வீட்டில் உள்ள எவருக்கும் பாதிப்பு ஏற்படாத போதும், சமையலறையில் இருந்த சில பொருட்கள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் நெடுங்கேணிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## பாரந்தூக்கி உடைந்து விழுந்து யுவதி ஒருவர் பரிதாப மரணம்

கண்டி, டிசெ. 20

கண்டி, பிலிமத்தலாவ பிரதேசத்திலுள்ள தனியார் தொழிற்சாலையொன்றில் பாரந்தூக்கி உடைந்து விழுந்ததில் யுவதி ஒருவர் மரணமடைந்ததுடன் மற்றுமொரு யுவதி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பலன தேகித பிரதேசத்தைச் சேர்ந்த அரேச ஜயமாலி குலரத்ன (வயது 26) என்ற யுவதியே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

இரு யுவதிகளும் மேல் தளத்திலிருந்து பொருட்களுடன் கீழ் தளத்துக்கு வந்தபோதே இந்த விபத்தை எதிர்கொண்டுள்ளனர். விபத்துக்குள்ளான யுவதிகளை பேராதனை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போதிலும் அதில் ஒரு யுவதி செல்லும் வழியிலேயே உயிரிழந்துள்ளார். (இ)










இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.12.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்7.05 மணி : உளவியல் கருத்து-உளவளத்துணையாளர் நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
07.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கொழும்பு-16-மறு ஒளிபரப்பு
11.30 மணி : மனிதனின் மறுபக்கம்
பகல்
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை நகைச்சுவை நிகழ்ச்சி
1.00 மணி : அறிந்தும் அறியாமலும் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-ரோமியோ யூலியற்,தடம்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயிலர் ரைம்
6.30 மணி : நலந்தானா



7.00 மணி : சொற்சமர் -பாடசாலை மாணவர்களுக்கான விவாத நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
9.30 மணி: ஹலோ கோடம்பாக்கம்
10.00 மணி : நேருக்கு நேர்

DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : உ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்
**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம்)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு சனி)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறுஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : விவிலியம் அறிவோம் (திருகோணமலை) ஞாயிறு
**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்) மறு ஒளிபரப்பு
04.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு) மறுஒளிபரப்பு
05.00 மணி: திருப்பலி (திருகோணமலை) மறுஒளிபரப்பு
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறுஒளிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் மறு ஒளிபரப்பு
7.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம்) மறு ஒளிபரப்பு

Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு